
ௐ

# இந்துப்பண்பாடு
## சில சிந்தனைகள்

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam



வாழ்நாட் பேராசிரியர் இலக்கியகலாநிதி

**கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள்**

# பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை

அந்தணசமூக மேம்பாட்டிற்காக உழைத்துவரும் நியந்த்ரீயின் 24-09-2002 செயற்குழுக்கூட்டத்தில் நல்லூர் சிவன் தேவஸ்தானமும், நியந்த்ரீயும் இணைந்து கல்விச் சேவையாலும் சமயப் பணியாலும் நிறைவுபெற்று விளங்கியவரும், எமது குருநாதரும், 79 வருடகாலம் வாழ்ந்து 07-08-2000 அன்று அவுஸ்திரேலியாவில் அமரத்துவம் அடைந்தவரும், நல்லூர் சிவன் தேவஸ்தானத்தின் பிரதமகுருவும், தர்மகர்த்தாவும், முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் பிரதமகுருவுமாகிய வாழ்நாட் பேராசிரியர் இலக்கிய கலாநிதி கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாச நாதக்குருக்களின் சிந்தனைகள் பல செயல்வடிவம் பெறவேண்டியுள்ளது. எனவே, அப்பெரியாரான எமது குருநாதரின் அன்புக்குப் பாத்திரமான நாம் நல்லூர் சிவன் கோவிலை அடித்தளமாகக் கொண்டு **பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை** ஒன்றினை உருவாக்க வேண்டும் எனத் தீர்மானித்ததை பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா முன்மொழிய பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் வழிமொழிந்தார்.

இத்தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு சபை செயலாக் கத்தில் ஈடுபட்டு இஞ்ஞாபகார்த்த சபை உருவாக்கப்பட்டது. இச்சபையின் ஆயுட்கால உறுப்பினர்களாக: தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ணஐயர், செயலாளர் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன், பொருளாளர் பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்தசர்மா, உறுப்பினர்கள் பிரம்மஸ்ரீ ந.சதாசிவஐயர், பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா, பிரம்மஸ்ரீ சி.இரவீந்திரசர்மா, பிரம்மஸ்ரீ க.இலட்சுமணசர்மா, சர்வதேசப் பிரதிநிதி திருமதி கமலாம்பிகை சுவாமி நாதன் ஆகியோர் தெரிவாகினர்.

இச்சபை யாழ்.பல்கலைக்கழகத்தில் வருடந்தோறும் அமரர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள் நினைவுப்பேருரை நிகழ்த்துவதற்கும்; அங்கு அன்னாரின் பெயரில் இந்துநாகரிகம், இந்து தத்துவம், சம்ஸ்கிருதம் ஆகிய பாடங்களில் சிறப்புக் கலைத்தேர்வில் திறமைச்சித்தி பெறும் மாணவர்களுக்குப் புலமைப்பரிசு வழங்க நிதியைச் சேகரித்து யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வழங்குதல்; அன்னாரின் நினைவாக காலந்தோறும் நூல்வெளியீடு, அந்தணர் கல்வி சமூக மேம்

ௐ

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் இரண்டாமாண்டு நினைவு வெளியீடு :09

# இந்துப்பண்பாடு சிலசிந்தனைகள்

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

ஆக்கம் :

வாழ்நாட் பேராசிரியர் இலக்கிய கலாநிதி

கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள்

M.A(Cey), Ph.D.(Poona), Hon.D.Lit.(Jaf.).

வெளியீடு :

பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை.

சிவன்கோவில், நல்லூர்,

யாழ்ப்பாணம்.

இலங்கை.

07-08-2002

நூல் : இந்துப் பண்பாடு சில சிந்தனைகள்

ஆசிரியர் : கா.கைலாசநாதக் குருக்கள்

பதிப்பு :

முதற்பதிப்பு : 09-08-1985

இரண்டாம் பதிப்பு : செப்ரெம்பர் 1986

மூன்றாம் பதிப்பு : 07-08-2002

வெளியீடு : பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள்
ஞாபகார்த்தசபை.
சிவன்கோவில்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

கணனி வடிவமைப்பும்
பதிப்பும் : பிள்ளையார் அச்சகம்,
676, பருத்தித்துறை வீதி ,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

அட்டைப்படம் : முன்னேஸ்வரம் வடிவழகி அம்மை.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பெயரற்றமதம் | 4 |
| 2. | தோற்றம் முடிவில்லாத மதம் | 5 |
| 3. | பாரதமெங்கணும் அதற்கப்பாலும் பரந்து பரவியமதம் | 5 |
| 4. | ஒருமைப்பாடு கொண்ட மதம் | 7 |
| 5. | பரந்தகாலப் பரப்பினதான மதம் | 7 |
| 6. | பரந்த நோக்கினதான மதம் | 9 |
| 7. | விரிந்த இலக்கியமுடைய மதம் : வேதம் | 11 |
| 8. | பரந்த இலக்கியம் : ஆகமம் | 12 |
| 9. | பரந்த இலக்கியம் : இதிகாச புராணங்கள் | 14 |
| 10. | பரந்த இலக்கியம் : தோத்திரங்கள் சாத்திரங்கள் | 17 |
| 11. | கலை இலக்கியங்கள் | 19 |
| 12. | மதமும் வாழ்க்கையும் | 19 |
| 13. | கிரியை : ஆத்மார்த்த பூசை | 21 |
| 14. | கிரியை : பரார்த்த பூசை | 22 |
| 15. | கிரியை என்னுங் கலை | 22 |
| 16. | சமயம் கலைகளைத் தோற்றுவித்தமை | 25 |
| 17. | கோயிலில் இராசோபசாரம் | 27 |
| 18. | குரு | 30 |
| 19. | சமயமும் தத்துவமும் | 31 |
| 20. | புருடார்த்தங்கள் | 34 |
| 21. | மதபரிபாலனம் | 35 |
| 21. | தனிஒருவர் இணைக்கப்படாமை | 35 |
| 22. | இந்து என்றால் சைவமே. | 36 |
| 23. | அடிக்குறிப்புக்கள் | 38 |
| 24. | நூற்பட்டியல் | 45 |

உ

அம்பாள் துணை

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam



# பிரம்மஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் கைலாசநாதக்குருக்கள்

தோற்றம்
15-08-1921

மறைவு
07-08-2000

ௐ

# இந்துப்பண்பாடு
# சில சிந்தனைகள்

பேரற்றதாய், தோற்றமும் முடிவும் பொருந்தப் பெறாததாய், பாரதம் முழுவதும் படர்ந்து பயின்றுவரும் இந்துமதம், பலவகைப்பட்ட தெய்வங்களைக் கூறுவ தெனினும் உண்மையில் ஒரு தெய்வக் கோட்பாடுடைய தாய், பரந்த நோக்கும் ஈடிணையற்ற ஒருமைப்பாடுங் கொண்டதாய், பாரத நாட்டு மொழிகள் யாவற்றிலும் விரிந்த இலக்கியங்களில் விரித்துரைக்கப்பட்ட மதமாய், வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த சிறப்பினதாய், கிரியைகள் பல்கிப் பெருகிய வழிபாட்டு முறைகளுங் கலைகளும் பொலிந்த கோயில்களில் இராசோபசாரங் களாலும் தெய்வ வழிபாடு நிகழத் தருவதாய், குருவுக்குத் தனியிடந் தந்து தெய்வமெனப் போற்றுஞ் சிறப்பினதாய், தன்னைச் சார்ந்தவர்க்கு இம்மை, மறுமை இரண்டையும் கொளிக்க வைக்க வல்ல புருடார்த்தங்களை உறுதிப்படுத் துவதாய், தன்னைப் பேணிப் பாதுகாக்கவல்ல புரவலனோ நிறுவனமோ இல்லாத இடத்தும், என்றும் நிலைநின்று வரும் இயல்பினதாய், ஒருவருடனுந் தனிப்பட்டு இணை யாது, தனியொருவராலும் எவ்வகையாலும் ஆக்கப் படாததாய், இது சைவமே என்று ஆராய்ச்சியாளரிடத்துத் துணிபு பிறப்பிப்பதாய் விளங்குஞ் சிறப்புடையது.

இந்து மதம் உலகில் வழங்கும் மதங்களில் முக்கியமானது, இது உலகப் பிரசித்திபெற்ற மதம். இன்று உலகமக்களுள் பெரும ளவினர் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர். இவ்வகையில் கிறிஸ்தவத்திற்கு முதலிடம் உரியது. உலகநாடுகளில் பெரும் எண்ணிக்கையினரைக் கொண்டநாடு சீனா. அங்கு நிலவும் கன்பூசிய மதம் இவ்வாறு நோக்குமிடத்து இரண்டாவது நிலையினது. இதை யடுத்து மூன்றாவது நிலை நிற்பது இந்துமதம்[1].

இந்து மதம் இவ்வாறு உலகில் பெருமளவில் கடைப்பிடிக் கப்படும் மதமாக மட்டுமல்லாமல், உலகெங்கணும் பரந்து வாழும் பேரறிஞர்களின் சிந்தனையைக் கவரவல்ல உயரிய அமிசங்கள் வாய்ந்ததாயும் விளங்குகின்றது. இம்மதத்தைச் சாராதவர்களான மேனாட்டவர்களும் இம்மதப் பண்பாட்டுச் சிறப்பமிசங்களால் கவரப்பட்டவர்களாய்த் தாமும் இந்துக்களாக வாழவிழைந்து பாரத நாட்டிற்குப் பல்லாயிரக் கணக்கில் படையெடுத்ததை இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நேரே கண்டோம்.

வெறும் வெளியமைப்பினால் முதலில் கவரப்பட்டவர்கள் நாளடைவில், இம்மதச்சிந்தனை வெள்ளத்தில் மூழ்கத் தொடங்கி யதும் தங்கள் கவலைகளை மறந்து, தாம் நாடிநிற்கும் ஆறுதல் பெற்றதுடன் மனநிறைவைத் தரவல்ல பெருஞ் சாந்தியையும் பெறத் தலைப்பட்டனர். மன அமைதியைப் பெரிதும் தரவல்ல மதமே தலைசிறந்த மதமெனப் போற்றற்குரியது. இன்று, வாழ்க்கையில் மனிதனுக்குப் பலதேவைகள் ஏற்படுகின்றன. இவை இன்றைய சூழ்நிலையில் பலவாகப் பெருகிக் கிடக்கின்றன. மனிதன் தன் தேவைகளின் எண்ணிக்கை நாள்தோறும் வளர்ந்துகொண்டு போகக் காண்கின்றான். தனக்கு வேண்டும் பொருள்கள் கிடைக்கும் வரை இவன் ஓய்வதில்லை. இவன் வேண்டி நிற்பன யாவும் இன்னும் பலவாகப் பெருகியும், கிடைப்பதற்கு அரியனவாகியும் இவனை ஒருபுறம் வாட்டி நிற்பன. இவனை மறுபுறம் வருத்துவது, அவ்வப் போது மனதில் எழும் பயம். தேவையும் பயமுமே மனிதனை, வாழ்க்கை முழுவதும் எல்லையில்லாதவாறு மாறி மாறி வாட்டி நிற்பன. மனிதனின் வாழ்க்கைப் பிரச்சினைகளனைத்தும் இவை

இரண்டினுள் அடங்கும். இதனைக் கருத்திற் கொண்டு நோக்குமிடத்து, வாழ்க்கையில் பிறப்பு முதல் தொடர்ச்சியாக நிகழும் தேவைகள் பற்றியும், இறப்புவரை, இறப்புட்படப் பல காரணங்களால் அவ்வப்போது விளையும் பல வகைப் பீதிகள்பற்றியும் எழும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்ப திலேயே மனிதன் வாழ்நாள் கழிந்து விடுகின்றது. இச்சிக்கல்களால் ஏற்படும் சுமையைக் குறைப்பதற்குக் குறிப்பிடத்தக்க வகையில் உதவுவது இந்துமதம்.

மனிதனின் வாழ்க்கைப் பிரச்சினைகள் தேவை, பயம் ஆகிய இரண்டுமே என்ற உண்மையை நன்கு உணர்ந்ததாக இந்துமதம் காணப்படுவது போன்று, உலகில் வேறு எந்த மதமும் காணப் படுவதில்லையென உறுதியாகக் கூறலாம். இவ்விரு வகை இன்னல் களையும் நோக்குடனேயே மக்கள் இறைவனை நாடுவர். இவ் வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையிலேயே இந்தமதம் அமைந் திருப்பது இதன் சிறப்பு. தேவைகளை வழங்குவதும் பயத்தை நீக்குவதும் தெய்வங்களின் இயல்புகள். இவ்வியல்புகளை வெளிப் படுத்தும் வகையிலேயே இந்துத் தெய்வங்களின் வரலாறுகள் கூறப்படுவன. மேலும், இவ்வரலாறுகளின் வெளிப்பாடாகி வடிவந் தாங்கி வழிபாட்டிற்காக இந்து ஆலயங்களில் நிறுவப்படும் தெய் வங்கள் 'பயப்படவேண்டாம்', என உணர்த்தி நிற்கும் **அபய கரத்தையும்**,[2] 'தேவைகளைத் தருகிறேன்', எனச் சுட்டிநிற்கும் **வரத கரத்தையும்**[3] காட்டி நிற்கின்றன. இவ்வாறு உணர்த்தும் கையமைதி இந்துத் தெய்வங்களுக்கே உரிய தனிச்சிறப்பு.

இந்துமதம் சிறப்புறுவது இதனால் மட்டுமன்று, இந்து நெறி நிற்போர் தெய்வத்தைச் சிந்தனையிலிருத்தித் தியானிக்கும் முறையே தனிப்பட்டது. இறைவன் எங்கும் என்றும் நிலைத்து நிற்பதனால் **சத்** எனப்படுவன். இமைப்பொழுதும் நெஞ்சில் நின்றும் நீங்காதானாய் மனதில் அறிவு சிந்தனை ஆகியவற்றைப் பெருக்கவல்ல ஞான வடிவினன் ஆதலால், **சித்** எனப்படுவன். எப்பொழுதும் இன்பமயமான வனாய் உள்ளத்தில் பேரின்பம் பெருக்கும் பெரும் இயல்பு படைத் தவன் ஆனதனால், **ஆனந்தம்** எனவும் சுட்டப்படுபவன் இந்துசமய சாத்திர நூல்கள் மட்டுமே இறைவனைச் **சச்சிதானந்த சொரூபி**[4]

யாக வருணிப்பன. இத்தகைய உயர்வு தந்து இறைவனைப் பரிபூரண நிலையில் உள்ளத்திலிருத்தித் தியானிக்கும் வாய்ப்பு இந்துநெறி நிற்பவருக்கே உரியது. இந்நிலையில் இறைவன் இந்து ஒருவனின் உள்ளத்தில் வைத்துப் போற்றப்படும் வரை, சச்சிதானந்தப் பெருவாழ்வாகிய உயர் இலட்சியம் அவனுள்ளத்தில் நின்று அவனை வளப்படுத்தும் வரை, அவன் குறைவெதுவுமின்றி நிறைவுற்று வாழ்வான். இப்பெரு நிறைவினைத் தரவல்லது இந்துசமயமே. இந்நிறைவினை வித்தாகக்கொண்டு முகிழ்ந்த இந்துப்பண்பாடு பன்முகப்பட்ட சிறப்புகளை வெளிப்படுத்தி நிற்கின்றது. இச்சிறப் புக்கள் பற்றிய சிந்தனைகளுள் சிலவற்றை நிலைக்களனாகக் கொண்டு இந்நினைவுரை ஆரம்பிக்கின்றது.

## பெயரற்ற மதம்

இந்துமதம் தொடக்கத்தில் பெயரெதுவுமே இல்லாதிருந்தது.[5] இந்து என இம்மதத்திற்கு வழங்கும் பெயர் இந்தியமொழிகளில் சமயம்பற்றி உருவான மூலநூல்களெதிலும் காணப்படுவ தில்லை.'ஹிந்து' என மேனாட்டவர் வழங்கிய பெயர்மருவி இந்து என வழங்கத் தொடங்கியது. இந்து மதத்தின் தொன்மையைக் கருத்திற் கொண்டு பார்க்கும் பொழுது சமீப காலத்திலேயே இதற்கு இப்பெயர் வழங்கத் தொடங்கியது என்பதை உணருகிறோம்.

வெளிநாட்டவர்கள், பொதுப்பண்புகள் வாய்ந்தவையாய்ப் பாரத நாட்டில் பரவுண்டு நிலவிய மதப்பரவல்களைக் கண்ணுற்றதும், அவற்றை முன்னிலைப்படுத்தியும் , ஒருமைப்படுத்தியும், நோக்கிய போது இப்பரவல்களில் அவர்கள் கண்ட பொதுவியல்பு, அவர்களை அவற்றிற்கு ஒரு பெயர் வழங்கி அப்பெயராற் சுட்டி அழைக்கும்படி தூண்டியது. இதன் விளைவே, இன்று இதற்கு வழங்கும் இந்துமதம் என்னும் பெயர்.

## தோற்றம் முடிவில்லாத மதம்

இம்மதம் போற்றும் இறைவன் தொடக்கமும் முடிவும் அற்றவன். எனவே, இத்தகைய இறைவனைப் போற்றும் மதமும்

ஆதியும் அந்தமும் அற்றது. இக்கூற்று முற்றிலும் பொருத்தமானதே. இவ்வாறு ஆதியும் அந்தமும் இல்லாததைச் **சநாதநம்** என்பர். இம்மதத்தைச் சுட்ட நேரிடும் வேளைகளில் புராதன நூல்கள் **சநாதந தர்மம், சநாதந மதம்**[6] எனக் குறிப்பிடுகின்றன.

இந்தியா என்னும் பெயர் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட அதே அடிப்படையிலேயே பாரதநாட்டில் நிலவி வரும் மதத்திற்கும் இந்துமதம் என்னும் பெயரும் வழங்கப்பட்டது[7]. ஏனைய உலகமதங்கள் பற்றிப் பேசும்பொழுது. இந்தியாவில் நிலவிவரும் மதம் பற்றிப் பேச்செழின், அதைச்சுட்டி உணர்த்த வேண்டிய ஆவசியகத்தை அடுத்தே இவ்வாறு பெயர் சூட்டவேண்டிய தேவை மேனாட்டவருக்கு ஏற்பட்டது. மேனாட்டவரே இவ்வாறு பெயர் வழங்கியவர்.

தொடக்கமே இல்லாதது என்று சொல்லுமளவிற்குத் தொன்மை வாய்ந்த இந்துமதம் மேனாட்டவர் இவ்வாறு பெயர் சூட்டுவதற்குமுன் பெயர் எதுவும்பெறாத காரணம், இந்து சமயத் திற்குரிய இத்துணைத் தொன்மைக் காலத்தில் உலகில் வேறுமதம் எதுவும் இல்லாது, இது மட்டுமே தனிமதமாக இருந்ததேயாகும். தனியொரு மதமாயிருந்த நிலையில் இதற்குப் பெயர் சூட்டிப் பிரித்துச் சுட்டும் தேவை எழவில்லை. " வேறுமதம் ஏதாவது இருந்திருந் தாலல்லவா, அதனின்றும் இதனை வேறுபடுத்துவதற்காக இதற்குப் பெயர் வழங்க வேண்டிய பெருந்தேவை நேரிட்டிருக்கும்.?" என்ற கருத்துப்பொருட்செறிவுமிக்கது.[8]

## பாரதமெங்கனும் அதற்கப்பாலும் பரந்து பரவிய மதம்

தொன்று தொட்டுப் பாரத நாடு எங்ஙனும் பரந்து நிலவிய இம் மதம், உள்ளமைப்பில் அவ்வப் பிரதேசச் சூழல்களுக்கேற்பத் தெய்வங்களும் வழிபடுமுறைகளும் வேறுபடும் வண்ணம் பல்வகை அமைப்புப் பொருந்தி நிலவிவந்தது. பரந்த இடப் பரப்பையுடைய பாரதத்தில், இவ்வாறு அவ்வப் பிரதேசத்திற்கு ஏற்றவாறு, பல்வகை வேறுபாடுகளை இம்மதம் கொண்டு அமைந்ததில் ஆச்சரியத்திற்கு

இடம் இல்லை. தமிழ் நாட்டிலேயே நிலஅமைப்பை அடிப்படையாகக் கொண்டு சமயம், வழிபாட்டிற்குரிய தெய்வங்கள், வழிபடுமுறைகள், ஆகியன தமக்குள் வேறுபட்டு அமைந்திருந்தன என்பதற்குத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் சான்று பகருவன.[9]

இவ்வாறே, பாரதம் எங்கணும் பரவலாக நிலவிய வழிபாட்ட மைப்புக்களில் விநாயகர், முருகன், சூரியன், சிவன், விட்டுணு, சக்தி ஆகிய தெய்வங்களையும், ஆங்காங்கு கிராமங்களில், தலை முறை தலைமுறையாக வழிபடப்பட்டு வந்த தெய்வங்களையும் காணமுடிகின்றது.[10]

இத்தெய்வங்களின் வழிபாட்டினை நிலைக்களனாகக் கொண்டு சிந்தனைச் சிறப்புக்கள் காலத்துக்குக் காலம் தோன்றின. அச்சிந்தனைகள் நிலைத்து நின்று மக்கள் தேவையாகிய மனநிறை வினைத் தோற்றுவித்தன. சிறப்பமிசங்களுடன் சிந்தனை வளமும் பொதுவாயமையும்வேளை அவற்றை வழங்கிய வழிபடு முறைகளும் ஒன்றோடொன்று இணையும் நிலையும் உருவாவது இயல்பு. இதன் விளைவாகப் பலவாகி இருந்து வந்த வழிபாட்டு நெறிகள் **சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணபத்யம்** என ஆறு நெறிகளாக ஒடுங்கி அவை தாமும் சைவம் வைணவம் என இரண் டாகக் குறுகி அமைந்து, ஈற்றில் நெறிகள் யாவுமே சைவத்துள் அடங்கும் நிலை உருவாகியது.

கிரேக்க இலக்கியம் காட்டும் சமயமும் அதை அடிப்படை யாகக் கொண்ட நாகரிகமும் புராதனமானவை. சில அமைப்புக்களில் இவை வேதங்களும் இதிகாசங்களும் காட்டும் சமயப் பண்பாட்ட மைப்பையுடையவை. எனினும், அவற்றின் உள்ளமைப்பும் நோக்கும் முற்றிலும் வேறுபடுவன. உட்பொருள் பொதிந்து பல தத்துவங்களும் உயர் தத்துவ சிந்தனைகளும் ஊடுருவி நிற்கப் பெற்று வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் சிறப்பு, **வேதங்களுக்கும் இதிகாச புராண ங்களுக்கும்** உரியது. இதனால், இவை புராதன கிரேக்க ரோமானிய இலக்கியங்களைப் போலல்லாது, புத்துயிருடன் அன்றுபோல் இன்றும் விளங்கி இந்துப் பண்பாட்டுக்கு என்றும் மங்காது மிளிரும் அழகு தந்து மக்கள் வாழ வழிகாட்டிநிற்பன.

## ஒருமைப்பாடு கொண்ட மதம்

காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை பரந்திருக்கும் பாரதநாடு முழுவதற்கும் உயிர்நாடியாகத் தொன்றுதொட்டு விளங்கி வருவன தெய்வசிந்தனையும் அதையொட்டி விரிந்த வழிபாட்டு முறைகளுமேயாகும். பாரதத்தின் ஆயிரக்கணக்கான பிரதேசங்களில் சமயநெறிகள் தத்தமக்குள்ளே சிலபல வேறுபாடுகளைக் கொண்டு இடத்துக்கிடம் வேறுபட்டு நிலவிவந்தன. இவ்வாறாயினும், அவை யாவும் ஒன்றிணைந்து பிணிப்புண்டு ஒரு நிலைப்படுமியல்பின. இதனாலேயே, பரந்து விளங்கிய சமயநெறிகளை ஒரு முகப்படுத்தவும் முழுவதையும் ஒருமையில் தொகுத்துச் சுட்டவும் அதற்கு இந்துமதம் என்னும் பெயர் வழங்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. இது எவ்வாறு ஏற்பட்டதென்பது பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

வேதப் பண்பாடு பாரதம் முழுவதும் பரந்து சுவறிப் பல்லாயிரக்கணக்கான பகுதிகளில் நிலவிய பண்பாட்டமிசங்களில் தன் சாயலைப் பதித்தது.[11] பரந்து நிலவிய வழிபாட்டு முறைகளில் வேதங்களின் சாயல் இவ்வாறு பொருந்தியதே அவை ஒன்றோடொன்று பிணிப்புறக் காரணமானது. சிதறுண்டு கிடக்கும் முத்துக்களினூடே, நூல் ஊடுருவி நிற்கும்பொழுது, முத்துக்கள் யாவும் ஒன்றிணைந்து, ஓருருப்பெற்று, ஒரு முத்துமாலையாகி அழகு பொலிந்து நிற்பது போன்று பாரதம் முழுவதும் பரந்து, தனித்தனி உதிரிகளாகக் கிடந்த சமயஅமைப்புக்கள் வேதம் உள்ளே ஊடுருவிச் சென்றதன் விளைவாகப், பிணிப்புண்டு, ஒன்றிணைந்து, ஓருருப்பெற்று, இந்துமதம் என்ற பெயருக்குப் பாத்திரமாகி விளங்கி வருகின்றன. முத்துக்களை ஊடுருவி நிற்கும் நூல் தன்னை வெளிக் காட்டாது, உட்கரந்திருப்பது போல், இச்சமய வகைகளும் வேதமும் உள்ளே புகுந்து மறைந்து இருப்பதை உணருகிறோம்.

## பரந்தகாலப் பரப்பினதான மதம்

இந்து மதத்துக்குள்ள பல்வகைச் சிறப்புக்களுள் அதன் அகன்ற காலப்பரப்பு முக்கியமானதொன்றாகும். வைதிகப் பின்னணியில் இது அமைந்து இருப்பதனால் வேதங்கள் போன்றே,

இதுவும் தொன்மைமிக்க பெருமைக்குப் பாத்திரமாகின்றது. இவ் வகையில் காலப் பரப்பு முன்நோக்கியும் பின் நோக்கியும் அகன்று அமைவதே, இதற்குச் **சநாதனம்** என்ற பெயரை ஈட்டித்தந்துள்ளது.[12] **சநா** என்பது முதுமைப் பொருளையும், **தந** என்பது புதுமைப் பொருளையும் உணர்த்துவதனால் இது **சநாதந** மதமாகி முது மையும் புதுமையும் ஒருங்கிணைந்ததான, வேறெங்குங் காண்டற்கும் கற்பனையிலும் நினைத்தற்கும் அரியதானதொரு நிலையைக் குறிப் பிட்டு நிற்கும். தொடக்கமற்றவாறு தொன்மை வாய்ந்ததாயும், முடி வற்றவாறு எல்லையற்ற எதிர்காலம் வரையும் நிலவவல்லதாயும், குறிப்பிடப்படும் சமயம், சநாதனமான இந்து மதமொன்றே. சமயாநு பூதிமான்கள் இறைவனை ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியாக எங்களுக்குக் காட்டியுள்ளார்கள். சமய நூல்களும், தத்துவநூல்களும் இதையே அறைந்து கூறுகின்றன. இறைவன் பற்றிய இவ்வுண்மைநிலை, இறைவனையே மத்தியநாடியாகக் கொண்டு விளங்கும் சமயத்துக்கும் பொருத்தியே ஆகவேண்டும். "தெய்வம் அநாதி. தெய்வம் பற்றிய சமய உண்மைகளை எடுத்தி யம்பும் வேதம் அநாதி. தெய்வ வழிபாட்டுமுறையும் அநாதி. எனவே இந்துசமயமும் அநாதி" என்ற கருத்துக்கள், ஒன்றோடொன்று நெருங்கி இணைந்து, இந்துமதம் அநாதி என்ற கருத்தையும், இதே போன்று இந்துமதம் அநந்தமானது, முடிவற்றது, என்ற கருத்தையும் தெளிவாகச் சுட்டிநிற்கின்றன.

முன்னோக்கியும் பின்னோக்கியும் எல்லைகளற்று அகன்ற காலப்பரப்பு இந்துமதத்திற்கு இருப்பினும், இது, எத்தகையவிளைவை ஈட்டித் தருகின்றது என்ற கேள்வி எழுதல் இயல்பு. காலப்பரப்பிற்கு ஏற்பவே அனுபவப் பெருக்கம் ஏற்படும். எங்கள் பண்பாடு இன்று சிறப்புடன் விளங்குவது எம்மான்றோர் வழிவழியாகத் தம்முன்னோ ரதும் தமதும் அனுபவப் பெருக்கங்கள் மறைந்துவிடாது அவற்றைப் பேணிப்பாதுகாத்து எமக்கு வழங்கி வந்த காரணத்தினாலேயாகும். இதுவரை கழிந்த, மிகப்பரந்தகாலப் பரப்பில் எழுந்த அநுபவப் பெருக்கு **வேதங்களாகவும்,** அவற்றின் விரிவுரைகளாக எழுந்த விளக்கங்களாகவும், **ஆகமங்களாகவும், சாத்திரங்களாகவும், தோத்திரங்களாகவும், தத்துவ விரிவுகளாகவும்** பல அருளாள்களின்

மொழிகளாகவும், சொல்லுருவில் வடிக்கப்பட்டு விரிந்து விளங்கும் பெரும் இலக்கிய சமுத்திரமாகத் திகழ்கின்றது. இத்துடன் நின்று விடாது, பாரம்பரியமாக வந்த இவ்வநுபவவளர்ச்சி காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை அகன்று விரிந்த இடப்பரப்பில் ஆங்காங்கு நிலவிவரும் மொழிகளில், சிந்தனைச் சிறப்புப் பொலிந்தும், அனுபவப் பெருக்குச் சுவறியும், உருவான சமய இலக்கிய வடிவம்பெற்று நிற்கின்றது.[13] எல்லையற்ற எதிர்காலம் நீண்டு விளங்கும் இயல்பு இம்மதத்திற்கு உரியதாகையால் இவ்வாய்ப்பு, இம்மதத்திற்கு வற்றாத இளமையும் தளர்ச்சியுறாத வலிமையையும் உரியதாக்கி விட்டது.

## பரந்த நோக்கினதான மதம்

இந்துமத்திற்குப் பெரும் புகழீட்டித் தருவது, அதன் பரந்த நோக்கு.[14] உலகில் ஏனைய மதங்களில் இது இயல்பாகக் குறைந்தே காணப்படுவது. இந்துமதப் தொடர்பினால் இப்பண்பு பிறமதங்களில் இப்பொழுது சிறிதுசிறிதாகப் பெருகி வருவதைக் காணலாம். இந்து மதத்தில் இது இயல்பாகப் பொருந்தியிருப்பதற்குக் காரணம், அதன் உள்ளமைப்பே. அதைச்சற்று ஆராயலாம். இந்துமதம் பரவிய இடப் பரப்பு முன்னர் கூறியவாறு பரந்த அமைப்பினது. இப்பரப்பிற்கேற்ப மத உள்ளமைப்புக்களும் பல்வேறுபட்டனவென்பதும் ஏற்க னவே தெளிவாக்கப்பட்டது. இவ்வாறு வேறுபாடுகள் நிலவும் இடத்தும், ஒன்றிணைதல் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் வேறுபாடுகளைக் களைந்து, ஒற்றுமைப்பட்டு, ஒன்றாகும் நிர்ப்பந்தம் உருவாகும் காரணத்தால், தம்மிடம் தொடர்ந்தும் வேறுபாடுகள் நிலவினும், அவற்றைச் சகித்துக்கொள்ளும் அவசியமும், இணைந்து போகும் மனப்பான்மையும், தோன்றலாயின. இவ்வாறாகப் பெரும் அமைப்பைக் கொண்டுருவான இந்துமதம், பல்வகையான உள்ளூறுப்புக்களைத் தன்னுள் இயைவுறும்படி இணைத்தும், பல்வகை வேறுபாடுகளில் ஒற்றுமையைத் தோற்றுவித்தும் ஒன்றுடன் ஒன்றை அரவணைத்தும் பிணிப்பதில் ஈடிணையற்றும் விளங்கிற்று. இவ்வாறு பல்வகை வேற்றுமைகளிலும் ஒற்றுமைகாணும் உயர்பண்பு, வேதங்களிலேயே வித்திடப்பட்டு[15], நெடுங்காலமாக வளர்ந்துவரக் காண்கின்றோம். இந்துமத நூல்களில் வாழ்க்கைக்கு வழிகாட்டி, முறைப்படி நெறிப்

படுத்தும் நூல்களான **தர்மசாத்திரம்**[16], **அர்த்தசாத்திரம்**,[17] **காம சாத்திரம்**,[18] வீடுபேற்றுக்கு வழிபுகட்டும் நோக்குடைய பல்வகைத் தரிசன சாத்திரங்களும், சமயஅடிப்படையில் இறுக்கமான கட்டுப் பாட்டுடன் உருவானபொழுதும், இலௌகிக சம்பந்தமான வாழ்க்கை யின் ஒவ்வோரமிசத்திலும் தனித்தனியே நெறிப்படுத்தும் சாத்திரங்கள் உருவெடுத்து, அவ்வவ்வமிசங்கள் பற்றிய விதிமுறைகளை அழுத்தி வற்புறுத்திச் சட்டதிட்டங்களை வலியுறுத்திவரும் நிலையிலும், இந்து நெறி நிற்பவர் தத்தம் தகுதிக்கேற்ப விதிகளைத் தளர்த்திக் கடைப் பிடித்தற்குரிய ஒருவகை உரிமையினைத் தோற்றுவித்து, அவரவர் தத்தம் மதாநுட்டானங்களின் அமைப்பினைத் தமக்கு இயைபுறும் வண்ணம் தெரிந்தெடுக்கும் ஒருவகைச் சுதந்திரத்தினை வழங்கி, "இந்துக்களாக வாழ்வது எளிது" என உணரத்தருவது இந்துமதம்.

இந்து சமயத்தைச் சார்ந்தோருக்குப் பலவகைச் சுதந்திரங்கள் இருப்பதை அவதானிக்கின்றோம்: இந்துமதத்தினர் ஒவ்வொருவரும் தான் கடைப்பிடிக்க இருக்கும் சமய உள்ளமைப்புகளைத் தானே தெரிந்தெடுக்கவும், தன் இஷ்ட தெய்வத்தைத் தான் விரும்பியபடி தெரியவும், இந்து மதத்திற்குரிய பல்வகை வழிபாட்டு முறைகளுள் தனக்குக ந்ததெனத் தென்படும் முறையைத் தெரிந்து கடைப்பிடிக் கவும், சுருங்கக்கூறின், பல்வகையான இந்துமத அமைப்புக் களுள் தனக்கேற்ப வேண்டியவற்றை எல்லாம் தெரிந்து தன் சமய வாழ்க்கையைத் தனக்கு உரியவாறு அமைத்துக் கொள்ளவும் உரிமை ஒவ்வொரு இந்துவுக்கும் உண்டு. மேலும், இந்துமதத்தில் காணப்படும் இன்னொரு சிறப்பு அதற்குப் புறம்பான அமைப்புக்களி லிருந்தும் நல்லபண்புகளைத் தெரிந்து தனதாக்கிக் கொள்ளுதலாகும்.

இந்து மதத்தில் "யாதொரு தெய்வங் கண்டீரத் தெய்வமாகி" என்ற பாடல்[19] கூறுவது போன்று, எத்தெய்வத்தை வழிபடினும், அத்தெய்வமாகி ஆங்கே அருள் சுரப்பவர் மாதொருபாகன் என்ற கருத்தும்; "எத்தெய்வத்தை வழிபடினும் வழிபடுபவன் என்னையே வழிபடுகிறான். ஆனால், அவன் உரிய வழிபட்டு முறையினின்றும் விலகிநின்று வழிபடுகிறான். வழிபாடு ஈற்றில் என்னையே சாரும்" எனப்பொருள் பொதிந்த **பகவத்கீதை**[20] சுலோகம் தரும் கருத்தும்

இந்து மதத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. பரந்த கண்ணோட்டத்தைப் புலனாக்குகின்றன.

## விரிந்த இலக்கியமுடைய மதம் வேதம்

வேதம் அறிவுக் கருவூலம். இது பற்றியே இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. இது **அபௌருஷேயம்**[21] எனப்படும். புருஷர்களால் ஆக்கப்படாதது என்பது இதன்பொருள். வேதங்கள் காலங் கடந்தவை; சநாதனமானவை, எனப் போற்றப்படுவன. உலகில் இன்று கிடைக்கும் இலக்கியங்களுள், வேதம் தொன்மைகாரணமாக முதலிடம் பெறுவது. இவ்வகைத் தொன்மைபற்றி ஆராய்ச்சியாளரிடையே அபிப்பிராய வேறுபாடு எதுவுமே கிடையாது. வேதம் வாய்மொழி மூலம் சந்ததி சந்ததியாக அதன் உண்மையுருவம் சிறிதும் வேறுபடாதவாறு இன்றுவரை வழங்கி வந்து கொண்டிருக்கின்றது. வேதம் ஓதுவதற்கேயுரியது. இதை எழுதிப்படிக்கும் மரபு இல்லை.

வேதம் சிந்தனைப் பொக்கிஷம். இது பாரதப்பண்பாட்டின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவிநிற்கும் அறிவுத்தேக்கம், இந்துப் பண்பாடு வேதத்தாலேயே பன்முகப்பட்டு ஓங்கி வளரலாயிற்று. சமயவளர்ச்சி, இப்பண்பாட்டுச் சிறப்புக்களினோரமிசம். சமயக் கருத் துக்கள் வேதங்களாலேயே வளம்படுத்தப்பட்டு நன்கு வேரூன்றி வளர்ந்ததன் விளைவான இந்துசமயம் தலைசிறந்த சமயமாகத் திகழ்ந்து வருகின்றது. பலவகைச் சிந்தனைகள் வேறெங்குங் காண முடியாத சிறப்பினவாய்ச் சமயத்துடன் இணைந்தவாறே வளர்ந்து இந்திய தத்துவ பாரம்பரியத்தைத் தோற்றுவித்தன. இந்து தத்துவ வளர்சிற்கும், சிறப்புக்கும், வேதமே நிலைக்களன்.[22] பலகலைச் சிறப்புக்களால் பண்பட்டது இந்துப்பண்பாடு. இந்துக்கள் பேணிப் பாதுகாத்து வரும் பல நுண்கலைகள் வேதங்களைத் தோற்று வாயாகக் கொண்டவை. இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வற்றா ஊற்றாக இருந்துவரும் வேதம், பெரும்பழமையையும், வளர்ந்து கொண்டே இருக்கும் புதுமையையும், ஒருங்கமையப் பெற்றதனால் இந்துப் பண்பாடு என்றும் நிலைதிரியாச் சிறப்பு வாய்ந்த பண்பாடாகத் திகழ்ந்து கொண்டே இருக்கின்றது.

**வேதம்** தமிழில் **மறை**[23] எனச் சுட்டப்பெறும். இவ்வாறு சுட்டப்படும் மரபு வடமொழியுட்பட வேறெந்த மொழியிலும் காணப் படாதது. இது பொருட்செறிவுமிக்கது. வேதம் கூறும் பொருள் புலனாகாது மறைந்து நிற்பதனாலேயே, இது **மறை** எனப்படலாயிற்று. வேதங் கூறுந்தெய்வங்களும் மறைந்து நிற்பவையே[24]. வேதம் மறைந்து நின்று இந்துப் பண்பாட்டுக்கு ஊட்டமளித்து நிற்பது கூர்ந்து அவதானித்தற்பாலது. **இதிகாசங்கள், புராணங்கள், சாத்திரங்கள், தோத்திரங்கள்,** அருளாளர்களின் அருள்மொழிகள், சமயாநுபவப் பெருக்கை விவரிக்கும் நூல்கள், கலைகள் பற்றிய அடிப்படை நூல்கள், முதலியன வேதம் கொண்டு விளங்கும் அறிவுத் தேக்கத்தின் பரிணாமங்களாகும்.[25] வேதங்கள் மறைந்து மறையாக இருப்பதும் அதைத் தொடர்ந்து ஏனைய நூற்றொகுதிகள் அறிவுச் செல்வத்தையும் அநுபவப் பொருளையும் வெளிப்படையாக, எல்லோருக்கும் பயனுறும் வண்ணம் அவரவர்க்கு ஏற்றவாறு வாரி வழங்கும் வகையையும், உற்று நோக்குமிடத்து, வேதங்களை மண்ணுள் புதையுண்டு மறைந்து கிடக்கும் வேராகவும், இதிகாச புராணங்களை நிலத்தின் வெளியே முகிழ்த்தெழுந்து வானளாவ வளர்ந்தமரமாகவும், தோத்திரங்கள் சாத்திரங்கள் முதலிய அருள் நூல்களை மரத்தில் பழுத்துக் குலுங்கும் பழங்களாகவும், காணமுடிகின்றது.

## பரந்த இலக்கியம் : ஆகமம்

வேதங்கள் மறைபொருளாக அமைந்து சமயக் கருவூலமாக விளங்கிக் கருத்துக்களைச் சுருக்கமாகவும் மறைமுகமாகவும் பொதுவாகவும் கூறுகின்றன. வேதங்கள் **பொது நூல்**களெனவும் கூறப்படுவன. ஆகமங்கள் விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் கருத்துக்களைக் சிறப்புறக் கூறுவதனால் **சிறப்புநூல்** எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளன.[26] மறையாகி மறைந்து நிற்கும் வேதங்கள், எங்களுக்கு எட்டக்கூடிய அளவிற்குச் சமீபத்திலிருப்பினும் அவை மறை என்னும் நிலையில் எமக்கு மறைந்து நிற்பவையாதலால் அவை தொலைவிலிருப்பவையே. ஆகமங்களோவெனின், தெளிவாகவும், விளக்கமாகவும், விரிவாகவும் மறைவின்றி வெளிப்படையாகவும் கருத்துக்களை வழங்குவதனால் அவை தொலைவில் இருப்பினும், எங்களை அண்மித்து இருப்பவையே.

இறைவனே எங்களை அணுகத் திருவுள்ளம் கொள்ளும் பொழுது ஆகமம் ஆகி நின்று அண்மிக்கின்றான். "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாழ் வாழ்க"[27] என்பது அருள்வாக்கு. வேதங்கள் எங்களுக்கு இறைவனை வெளிப்படுத்திய நிலையிருந்து முற்றிலும் வேறுபட்டு ஆகமங்கள் அவ்விறைவனை **அருவம், அருவுருவம், உருவம்** ஆகிய அமைப்புக்களில் படிப்படியாகத் தெரியவைத்து[28], எல்லையற்றுப்பரந்த பரப்பில் வியாபித்ததாக வேதங்காட்டும் இறைவனை, எல்லைவரம்பு கோலியமைக்கப்படும் கோயில்களில், பலவகைத் திருவுருவங்களில் சாந்நித்தியமுறச் செய்தும், இவ்வடிவங்களில் வெளிப்பட்டு நிற்கும் இறைவனுடன் நெருங்கித் தரிசனம், வழிபாடு முதலியன நிறைவேற்று முகமாக அண்மித்து நிற்கவைத்தும் வழிகாட்டுவன.[29]

ஆகமநெறி நின்று அமைக்கப்பெற்ற கோயில்களில், இறைவனும் வழிபடுவோரும் நெருக்கமுறும் வண்ணம் பூசனை வழிபாடுகள் நிகழ்கின்றன. இவ்வழிபாடு கற்றாங்கு எரியோம்பி, அவ்வெரியில் ஆகுதிகளை, நேரே காணாதவாறு மறைந்து நிற்கும் தேவர்களுக்காகச் சொரிந்து, அக்கினி மூலம் அவர்களுக்குச் சேர்ப்பிக்கும் வைதிக முறையிலிருந்து அறவே வேறுபடுவது நோக்கற்பாலது. திருக்கோயில் வழிபாட்டில் இறைவனும் அவ்வப்போது திருவுலாவும் கொண்டு மக்கள் நடுவில் பவனிவந்து மேலும் நெருக்கமாக அணமித்து நின்று, அருள்பாலிக்கின்றான். ஆகமங்கள் விதித்துக்கூறும் **பிரதிட்டை** முதலிய **நைமித்திகக் கிரியைகளாலும்,** [30] **அபிடேகம், அலங்காரம், நிவேதனம், ஆராதனை** முதலிய **நித்தியக்கிரியை**களாலும்[31], வழிபடப்படும் இறைவன், கோயில்களில், திருவுருங்களில், **கும்பாபிஷேகம்** ஆகிய கிரியையால் **பிரதிட்டை** செய்யப்பட்ட காலம் முதல் அவற்றைவிட்டுக் கணமேனும் நீங்காது என்றும் சாந்நித்தியமாக இருப்பவன்[32] என்பதும் தெளிவாகின்றது.

இவ்வாறு என்றும் எழுந்தருளியிருக்கும் இறைவனை நித்தலும் வழிபடுவதற்கு, நான்கு உபாயங்களை ஆகமங்கள் விவரிக்கின்றன. சில ஆகமங்கள் தாம் கூறும் கருத்துக்களனைத்தையுமே **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்னும் நான்கு தலையங்கங்களின் கீழே

விவரிக்கின்றன.[33] இந்நான்கு உபாயங்களுமே, ஆகமத்தின் அடிப் படை நோக்கத்திற்கமைய இறைவனை அண்மித்து நெருங்குவதற் குரிய வழிகளாக அமைந்துள்ளன. ஆகமம் காட்டும் வழியே தனிவழி. ஆகம முறைப்படி அமைந்த திருக்கோயில்களில் நிகழும் வழிபாட்டு முறையே தனிச்சிறப்பு வாய்ந்தது. திருக்கோயில், அங்கு வழிபடுபவர் யாவரும் தத்தமக்கேற்றவாறு பல்வேறு நிலைகளில் நின்று கட்மை யாற்றுவதற்குரிய பெரியதொரு நிறுவனம். ஒவ்வொருவரும் தனக் காகத்தானே நிகழ்த்த வேண்டியது, **ஆத்மார்த்த பூசை**. இவ்வாத் மார்த்த பூசையே, தன்னைமப்பை விரித்துக் கோயில்களில் நிகழும் **பரார்த்தபூசை**யாகப் பரிணமித்துப் பிரமாண்டமாக வளர்ந்து, ஆன்மிக ஈடேற்றத்திற்கும், உள்ளத்தின் பூரிப்புக்கும், பேரானந்தப்பெருக்குக் கும், மனநிறைவுக்கும் வழிவகுத்து நிற்கின்றது. இற்றைச் சூழ்நிலை யில், ஆத்மார்த்த பூசை, படிப்படியாக வீடுகளில் நிகழ்த்தப்படாது மறைந்து கோயிலில் நிகழும் **பரார்த்த பூசை**யில் ஒன்றி, மறைந்து விட்டது.

## பரந்த இலக்கியம் : இதிகாசபுராணங்கள்

**இராமாயணம்** , **பாரதம்** ஆகிய இருபெரும் நூல்களும், சரித்திர நூல்களாகவே அமையும் நோக்குடன் உருவானவை.[34] இதிகாசங்கள் என்று இவற்றிற்கு வரும் பெயரே இதை உணர்த்தி நிற்கும். இவை வருணிக்கும் நிகழ்ச்சிகள், இருபெரும் போர்கள் ஒன்று இராமனுக்கும் இராவணனுக்கும் இடையே நிகழ்ந்த போரையும், மற்றையது, பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையே நடந்த யுத்தத்தையும் வருணிப்பதை நோக்காகக்கொண்டன. இதன் விளைவாக, இந்துக்களிடையே இருபெரும் **இதிகாசங்கள்** எழுந்தன. இவை, பாரதநாட்டுப் பிரதேச மொழிகளிலும் ஆக்கப்பட்டுச் சிறந்த இலக்கியங்களாக அமைந்து, பண்பாட்டுச் சிறப்பைப் பறைசாற்றி நிற்கின்றன. இவை இரண்டுமே, அரச பரம்பரையில் வந்த வீரர்களின் பெருமை கூறுவதைத் தனி நோக்காகக் கொண்டு உருவான **வீர காவியங்கள்.**

ஐந்து உறுப்புக்களைக்[35] கொண்டமைய வேண்டிய **புராணங்களும்**, சரித்திர நூல்களாகவே அமையும் நோக்குடன்

உருவாகத் தொடங்கின. உலகத்தின் தோற்றம், அழிவு, அரச பரம்பரை, இப்பரம்பரையின் வரலாறு, மநுக்களின் கால வரலாறு ஆகிய பொருள்களைக் கூறுதற்குரிய புராணங்களும் இதிகாசங்கள் போன்று, அரசபரம்பரையில் வந்து வீரர்களின் பெருமை கூறவந்த நூல்களே புராணங்கள் பதினெட்டும்[36]. முழுமையான சரித்திரநூல்களாக உருவாகியிருந்திருக்க வேண்டியவை. ஆனால்,அவை அப்படி அமையவில்லை.

இவ்வாறாக, அக்காலச் சூழ்நிலை, இவ்விருவகை இலக்கியங்களின் நோக்கத்தையும் அவற்றின் அமைப்பையும் வேறுபட்டு விலக வைத்துவிட்டன. இதிகாச புராணங்களாகிய இருவகை இலக்கியங்களே, சமயக் கருத்துக்களை வழங்கும் சமயநூல்களாக அமைந்துவிட்டன. இவ்வாறமையக் காணரமில்லாமலில்லை. சரித்திர நூல்களின் முக்கிய இடம் அரசருக்கே உரியது. அவர்கள் பற்றி அங்கு விவரித்தற்குரிய பொருள்கள் அவர்களின் திறமையும் பெருமையும் வீரமுமே. சமய நூல்களின் முக்கிய இடம் பெறுபவன் இறைவன். இறை என்பதே அரசனைக் குறிக்கும் சொல். சமய நூல்கள் முழுவதும் இறைவன் பெருமையும், கருணையும், அவன் அருளும் பெற்றியுமே பேசற்குரியன. இதிகாசபுராண காலத்தில் மக்கள்மத்தியில் உயரிடம் வகித்த அரசர்கள் கண்கண்ட தெய்வங்களாகப் போற்றப்பட்டார்கள். இந்நிலையில் அரசன் வேறு, தெய்வம் வேறு, என்ற பாகுபாடு சற்றுமின்றி அரசனே தெய்வமாகும் நிலை தோன்றலாயிற்று.

இச் சூழ்நிலையிலும் இன்னொரு திருப்பம் நிகழ்ந்து. நிலைமையை மாற்றியமைத்துச் சமய அமைப்பைப் புதியதொரு நிலையில் ஆழமாக வேரூன்ற வைத்துவிட்டது. அரசன் தெய்வமாகப் போற்றப்பட்ட நிலையைக் காட்டிலும், தெய்வம் அரசனாகி அரசனுக்குரிய பெருமை சிறப்புக்களெல்லாம் பொருத்தப் பெற்று, மக்கள் மனதில் உன்னத நிலை ஒன்றினை எய்தும் புதியதொரு போக்குத் தவிர்க்க முடியாதவாறு தோன்றலாயிற்று. இதன் விளைவாக, இதிகாச புராணங்களாகிய இருவகை இலக்கியங்களுமே அரசன் பெருமை கூறுவதை விடுத்துத் தெய்வம் போற்றுவதையே பொருளாகக்

கொண்டு அமையத் தலைப்பட்டன. புராணங்கள், தெய்வம் பற்றியும், தெய்வீகமான சமயத்தொடர்பு கொண்ட பொருள்கள் பலபற்றியும் விரித்துக் கூறலாயின. ஆகவே புராணங்கள் அரசனையும் அரசன் வீரத்தையும் விதந்து கூறுவதை விடுத்து அவனுக்குரிய இடத்தில் தெய்வத்தை நிறுத்தித் தெய்வத்தையும் தெய்வத்தின் வீரச்செயல் களையும் விரிக்கலாயின. இவ்வாறு விரியும் போதே சரித்திரநூல்கள் சமயநூல்களாகப் பரிணமிக்கக் காண்கிறோம். சமய நூல்களாகப் பரிணமித்ததும், இவ்விருவகை இலக்கியங்களும், தெய்வத்தின் வீரம் பற்றியும், பிராபவம் முதலியன பற்றியும், கூறுவதோடமையாது, தெய்வம் தொடர்புறும் சமயம் பற்றிய பல்வகை விவரங்களையும் கூறமுன் வந்தன.[37]

சரித்திர நூல்கள் சமயநூல்களாக மாறியதன் ஆரம்ப நிலையை இதிகாசங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அரசகுலத்தில் தோன்றியவர்களான இராமன் வரலாறும், பாண்டவர் வரலாறும், கூறவந்த இதிகாசங்கள், நாராயணனின் அவதாரங்களான இராமனதும் கிருஷ்ணனினதும் பெருமை பெருக்குவதாயமைந்தன. இவ்வாறு கூறப்படும் பெருமையில், தெய்விகம் பொலிந்து விளங்கக் காணலாம். பாரதம் எல்லையற்றவாறு விரிந்து, சமயம் பற்றிப் பல்வகைப் பொருள்களைத் தொகுத்துக்கூறும் கலைக்களஞ்சியமென, விமரிச கர்களால் வருணிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே, இது பேருருப்பெற்று உலகிலேயே பெரிய இதிகாசமாகத் திகழ்கின்றது. இவ்விருவகை இலக்கியங்களிலும், **வேள்வி, தவம், விரதம், தீர்த்தம், தியானம், தோத்திரம், ஜபம், பூசை** ஆகிய பல வழிபாட்டுமுறைகள், தெய்வங் களுடனே தனித்தனியே தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றன[38]. விரதங் களைப் பற்றி நிறைவான விபரங்கள்தரும் பிரமாண நூல்களாக விளங்குவன புராணங்கள். இவ்வாறு, இதிகாசபுராணங்கள், வேதங்கள் மறைமுகமாகக் கூறும் விபரங்களை எங்கள் தேவைக்கேற்ப விரித்தும், ஆகமங்கள்தரும் விவரங்களுக்கு மேலதிக விளக்கங்களாக அமைந்தும், சமய நெறி நிற்போருக்கு வழிகாட்டி நிற்பன.

## பரந்தஇலக்கியம் : தோத்திரங்கள் சாத்திரங்கள்

வேதங்களிலே பாடல்கள் பல இருக்கின்றன. இவை பல இணைந்து **சூக்தங்கள்** ஆகின்றன. சூக்தங்கள் தெய்வத்தை ஏத்திப்பாடுவன. பாடல்களில் தெய்வத்தின் தோற்றப்பொலிவின் வருணனை காணப்படும். இத்துடன் வேண்டுகோள்களும், பாடல்களில் இடம்பெறுவன. தெய்வத்தை வருணிக்கப் பிரயோகம் பெறும் அடைகள் தத்துவப்பொருள் சுவறியன. இவ்வாறு தோன்றும் தத்துவப் பொருள் தத்துவக் கோட்பாடுகள் வளருவதற்கு வித்தாக அமைவது வேதங்களிலே இன்னும் சிலபகுதிகள் விதிமுறைகளைக் கூறலாயின. செய்யவேண்டியவை எவை, தவிர்க்கவேண்டியவை எவை, என விதித்தும் விலக்கியும் கூறும் இவை **சாத்திரநூல்களுக்குத்** தோற்று வாயாய் அமைந்தன. சம்ஸ்கிருதத்தில் இவ்வாறு நாளடைவில் **தோத்திர நூல்களும், சாத்திரநூல்களும்** தோன்றியவாறே, பாரத நாட்டின் பல பல பகுதிகளில், ஆங்காங்கே பயிலும் மொழிகளிலும், தோத்திரநூல்களும், சாத்திர நூல்களும் தோன்றலாயின.[39] இவ்வகை நூல்களில், தமிழில், **திருமுறைகளெனப்** போற்றப்படும் தோத்திர நூல்களும், **சித்தாந்த மூல நூல்களா**கிய சாத்திரநூல்களும், பிரசித்தி பெற்றவை. இவை சமயவாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டி களாக அமைபவை. வடமொழியில் தோத்திர நூல்களுளவெனினும், **திருமுறைகளாகவும், திருவாய்மொழி** முதலியநூல்களாகவும் தமிழில் பெருகியஅளவிற்கு பெருகவில்லை. இவற்றில், பக்திப் பெருக்கை விளைவிக்கும் தனிச்சிறப்பைத் தெளிவாகக் காணலாம்.

வடமொழியில் சமய நூல்களாய் அமைந்தவற்றுள் கிரியை இயற்றும் முறை விரிக்கும் நூல்கள் உருவானவாறு வேறு எந்த மொழியிலும் விரியவில்லை எனலாம்[40]. அவ்வாறே, பிரதேச மொழி களில், குறிப்பாகத் தமிழில் ஊனினை உருக்கவும், உள்ளொளி பெருக்கவும், வல்ல பக்திப்பாடல்கள் பெருகிய அளவிற்குச் சம்ஸ்கிருதத்தில் காணப்படுவதில்லை என்பது மறுக்க முடியாதது.

வேத வேள்விகள் பற்றி விளக்கங்களும் விபரங்களும் தரும் வேதப் பகுதிகள், **பிராமணங்கள்**[41]. யாகத்திற்கு வேண்டியதான

வேதியின் கட்டட அமைப்பு முறைபற்றி விளக்கப்படும் பகுதிகளில் கட்டடக்கலையின் அமிசங்களும், **சாமவேதம்**[42] இசைக்கும் முறையிலிருந்து **இசைக்கலையும்**, கிரியைகள் தொடர்பான அத்தியாவசிய தேவையையொட்டி **ஒலியியல், யாப்பு, வானவியல்** போன்ற கலைத்துறைகளும், தோன்றி வளருவதற்கு ஆதாரமாயிருந்த மையால், வேதங்களைப் பல்வகைக் கலைகளின் பிறப்பிடமாகக் காண்கின்றோம். விதிமுறைகள் கூறி எடுத்துக்கொண்ட துறைபற்றி விளக்கமான உரைகளால் அறிவு புகட்டும்நூல், **சாத்திரம்**, எனப் பெயர் பெறும்[43]. பிராமண நூல்களாயமைவதால், சொல்ல வேண்டி யவற்றை எவ்வகையான ஆட்சேபத்திற்கும் இடந்தராதவாறு வற்பு றுத்தி விவரங்களைத் தருவது சாத்திரத்தினியல்பு. இந்துப் பண்பாட் டைச் சிறப்பிக்கும் கலைகள்பற்றிய விவரங்களையெல்லாம் அவ்வக் கலை பற்றி உருவான சாத்திரங்கள் விவரிக்கக் காண்கின்றோம். இவ்வாறு, வரைந்து, விதிமுறைகளை வற்புறுத்துவதால், சாத்திரங் கள் அவ்வத்துறைகளின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிப்பன என்ற குற்றச்சாட்டுப் பொருத்தமானதே. எனினும், இவ்வாறு வரைவு கோலாத விடத்து கட்டுப்பாடு குலைவதனால் ஒழுங்கு சீர்குலைந்து, அவ்வத்துறைகள் தனிப்பட்டவர்களால் பலவகைகளாகக் கையாளப் பெற்றும், பல அமைப்புக்களைப் பெற நேரிடும். இதன் விளைவாகப் பெருங்குழப்பம் தோன்றும். உதாரணமாக, இலக்கணவிதிகள் கூறும் சாத்திரநூல்கள், வரைவு கண்டு எல்லைகோலாது விடுப்பின், ஒவ்வொ ருவரும் தாம் வகுத்துக்கொண்ட அமைப்பில், மொழியைக் கையாளும் நிலையில், ஒருவர்மொழி, மற்றவருக்கு விளங்காத நிலையே ஏற்பட வாய்ப்புண்டு. இலக்கணத்தில் பொருத்திக் காட்டப்பட்ட இந்நிலை, எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும் வரையறைவு கூறும் சாத்தி ரங்கள் அவ்வப்போது வழங்கிவரும் சுதந்திரங்கள் பயன் தருபவை யாக அமைந்து, வளர்ச்சிக்கு வழி வகுப்பன என்பது அவதானத்திற் குரியது[44]. முற்றிலும் இலௌகிகமான இல்லற இன்ப அநுபவ வேறுபாடுகளையும் அவை பற்றிய நுண்ணிய விபரங்களையும் தரும் நூல்கூட வடமொழியில் சாத்திரமாக உருவாகியுள்ளது. இது **காமசூத்திர**மெனப் பிரசித்தி பெற்றது. உயரிய தத்துவ சம்பந்த மான, இலக்கண இலக்கிய சம்பந்தமான, முழுமை பெற்ற, சாத்திர அறிவு வழங்குவது மட்டுமன்றிக் காமசம்பந்தமான சாத்திர நூலையும்[45]

உருவாக்கி, இத்துறையில் இவ்வளவிற்கு வளர்ச்சி பெற்ற நூல், உலகில் எம் மொழியிலும் இன்று வெளிவந்ததில்லை. என்று போற்றிப் பேசும் பெருமை இந்துப் பண்பாட்டிற்கு உரியதல்லவா?.

## கலை இலக்கியங்கள்

இந்துக்களிடையே வளர்ந்த கலைகள் அறுபத்திநான்கு என்பர்[46]. இக்கலைகள் யாவும் தெய்விகமானவை. இது பற்றியே இந்துக்களின் பெருந்தெய்வங்களுள் ஒன்றாகிய அம்பிகையின் ஆயிரம் நாமங்களிலொன்று **கலாவதி** என்றும், இன்னொன்று அறுபத்தினான்கு கலைகள் மயமானவர்கள்[47], என்றும் கூறும். இக்கலைகள் வளர்வதற்குக் கோவில்களே நிலைக்களனாக இருந்து வந்தன. இக்கலைகள் பற்றிய விவரங்களை முறையாகவும், விவர மாகவும், கூறவேண்டிய தேவை தோன்றியதனால் இவை பற்றிச் சாத்திரங்களுருவாயின. கோயில்களுடன் தொடர்பு பெறும் ஆகமங் களில் கலைகள் பற்றிய விவரங்கள் சுருக்கமாகவே கூறப்பட்ட மையால், கலைகள் பற்றிய விபரங்களை விரிவாகத் தருவதற்காக நூல்கள், சாத்திரவடிவில் விரியலாயின. ஆகமம் கூறும் தனிப்பெருங் கலையான கிரியை பற்றிப் **பத்ததிகளும்**[48], திருவுருவமமைக்கும் கலைபற்றிச் **சில்பரத்நம், தத்வநிதி** முதலிய சிற்ப நூல்களும், கட்டடக் கலைபற்றி, **மாநாசாரம்** முதலான நூல்களும், இசைக்கலை பற்றிச் **சங்கீதரத்நாகரம்** முதலிய நூல்களும் தோன்றலாயின.

## மதமும் வாழ்க்கையும்

வாழ்க்கையில் இன்றியமையா நிகழ்ச்சிகள் உண்ணுதல், உறங்கல், உடுத்தல், முதலியன. இந்நிகழ்ச்சிகள் சீராயும் அழகாயும் நிகழும்பொழுது, அதாவது மனிதன் உண்ணும்பாங்கு, உறங்கும் முறை, உடுக்கும் அழகு ஆகியன சிறப்பாக அமையும்பொழுது, பண்பாட்டுச் சிறப்புப் பற்றிய பேச்சு எழுகின்றது. சுருங்கக் கூறின், மனிதனின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாமே மனதைக் கவரும் வகையில் அமைந்தால், அந்நிகழ்ச்சிகளில் பண்பாட்டுச் சிறப்பைக் காணுகின்றோம். இந்துக்களைப் பொறுத்த அளவில்

வாழ்க்கையின் அமிசங்கள் யாவுமே, ஏனைய மதங்கள் இலௌகிய மாகக் கருதுபவை யாவுமுட்படச் சமயப் பின்னணியைக் கொண்டவை. இதனால், இந்துக்களின் வாழ்க்கை முழுவதுமே சமயம் சுவறியி ருக்கக் காண்கின்றோம். காலை துயிலெழுதல் முதல், இரவு நித்திரை போகும்வரை, எல்லா நிகழ்ச்சிகளிலும் சமயம் கலந்துள்ளது. **சைவ வினாவிடை** போன்ற சமய அரிச்சுவடி நூல்கள் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் எவ்வாறு நிகழ்வதற்குரியன என்பதை விதித்துக் கூறுவதை அவதானிக்கும்பொழுது, வாழ்க்கைக்கும் சமயத்திற்கும் இடையே உள்ள தொடர்பு தெளிவாகத் தெரிகின்றது. சமயக் கலப்பே இல்லாதவாறு முற்றிலும் உலகியல் நிகழ்ச்சிகளிலீடு பட்டிருக்கும் வேளைகளிலும், அடிக்கடி, இறைவனை நினைவுகூரும் பழக்கம் இந்துக்களுக்கு உண்டு. சிறுவர் சிறுமியர்க்குத் தெய்வங் களின் பெயர் சூட்டும் இந்துக்களின் வழக்கம், அவர்களை அடிக்கடி இறைவன் பெயரைச் சொல்ல வைக்கின்றது. இந்துக்கள் தெய்வ வழிபாட்டிலும் தெய்வ சிந்தனையிலும் செலவிடும்பொழுது பெருமள வினது, வாழ்க்கையிலடிக்கடி விரதங்களைக் கடைப்பிடிப்பதனால் பகற்பொழுது முழுவதும், சிலவேளைகளில், பகலும் இரவும் இணைந்த, முழுநாளுமே தெய்வசிந்தனைக்கு உரியதாகி விடுகின்றது ஒவ்வொ ருவனும் தான் செய்துமுடிக்கும் செயல் முழுவதையுமே இறைவ னுக்கே அர்ப்பணிக்கும் பழக்கம்[49] இம்மை மறுமை இரண்டுக் கும் பெரும் பயன் தருவது. வாழ்க்கையில் முற்றிலும் இலௌகிய மாகக் கருதப்படும் விவாகம் முதலியன கூடத் தெய்விகம் சுவறிய னவாக அமைந்து விடுகின்றன. வாழ்க்கையில் நிகழும் சடங்குகள் யாவற்றிலுமே தெய்வ சிந்தனை வளரக்கூடிய தெய்விகச் சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது. ஏனைய மதங்களைக் கடைப்பிடிப்பவரிடத்து இவ்வமைப்பை இதே அளவில் காணுதல் அரிது.

இந்துவாகப் பிறந்து இந்துவாக இறப்பவனின் வாழ்க்கையை நுணுகி ஆராயின், வாழ்க்கையும் சமயமும் எவ்வாறு பின்னிப் பிணைப்புண்டு நிற்கின்றன என்பதை உணர முடியும். இவ்வாறு பிணிப்பற்று இருப்பதனாலேயே இந்துமதம் என்றும் வாழும் மதமாகத் திகழ்கின்றது. மதத்தை வளர்த்தல் வேண்டும் என முனைந்து ஒரு வரும் செயற்படாதே. இந்துக்கள் வாழும்வரை மதமும் வாழ்ந்து வரும்.

## கிரியை : ஆத்மார்த்த பூசை

**ஆத்மார்த்த பூசை** என்பது ஒவ்வொருவரும் தானே தனக்காகச் செய்யும்பூசை. "கடவுள் இந்தச் சரீரத்தை நமக்குக் கொடுத்தது அவரை வழிபட்டு முத்தி இன்பம் பெறும் பொருட்டே" என்ற நாவலர் வாக்குச் சகல சாத்திரங்களின் சாரமாகும். சரீரம் முழுவதுமே இறைவழிபாட்டில் ஈடுபடுதற்குரியது என்பது இதிலிருந்து பெறப்படும் **திருவங்கமாலை**[50] என்னும் தேவாரப் பதிகத்தில் இக்கருத்து விவரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம். **சிவானந்த லஹரி**[51] என்னும் தோத்திரத் தொகுதியிலுள்ள ஒருபாடலில், சங்கரரும் இதே கருத்தை விவரிக்கின்றார். அத்துதிப்பாடல் பின்வருமாறு அமைகின்றது. "இறைவனே என்னுடைய மனம் உன்னுடைய பாத தாமரைகளில் பதிவதாக; எனது வார்த்தைகள் உன் புகழ்பாடட்டும்; என் இரு கைகளும் உன்னை அர்ச்சிக்கட்டும்; இரு செவிகளும் உன் பராக்கிரமங்களை மடுக்கட்டும்; என்னுடைய புத்தி உனது தியானத்திலும், எனது கண்ணிணைகள் உன்னுடைய அருட்கோலப் பொலிவைக் கண்டின் புறுவதிலும் திளைக்கட்டும்; இவ்வாறு சரீரம் முழுவதுமே உன்னிடம் ஈடுபடும் நிலையில், நூல்களால், அதாவது சாத்திரங்களால் எனவே, தத்துவ விசாரணையினால், பயன் யாது தான் உளது? எதுவுமே இலது" என்பது இப்பாடல். உடல் உறுப்புக்கள் அனைத்தையும் இவ்வாறு ஈடுபடுத்தி இறைவனை வழிபடும் முறையின் விரிவு; வேதங்களிலும், ஆகமங்களிலும், அவை வழிவந்த கிரியை நூல்களிலும், தெளிவாகத் தரப்பட்டுள்ளது. நல்வினை தீவினை ஆகிய இருவினைப் பயனையும் நுகர்வதற்கும், ஒவ்வொருவனும் தானே உரியவனாகிறான். இவ்வடிப்படையில் ஒருவன் செய்யும் பூசையின் பயன் அவனையே சாரும். எனவே, இந்து ஒவ்வொருவனும் தானே பூசை முதலிய வழிபாடுகளைச் செய்யும் கடப்பாடுடையவன் ஆகின்றான். இதன் பிரகாரம், ஒருவர் செய்யும் பூசையின் பெறுபேறு, இன்னொருவரைச் சாருவதற்கு இடமே இல்லை என்பது தெளிவாகின்றது.

தீட்சை முதலியவற்றால் ஆத்மார்த்த பூசை செய்வதற்குரிய அதிகாரத்தை முறைப்படி பெற்றவர், பூசைக்காகத் தன்வீட்டில்

நிரந்தரமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் இறைவனைத் திருவுருவத்தில், **உபசாரங்களால்** தானே உபசரித்துப் பூசிக்கும்பொழுது, சற்றுமுன் கூறியபடி மனம் வாக்குக் காயமுட்படச் சரீரம் முழுவதுமே ஆத்மார்த்த பூசையிலீடுபடும். ஆத்மார்த்தபூசை நித்தமும் வீட்டில் நிகழ்தற்குரியது.[52] ஆத்மார்த்த பூசை **நித்தியமான**தெனினும், அது **நைமித்திகமாகி** அவ்வப்போது அனுட்டிக்கப்படுதற்குரிய நைமித்திகங்களாகவும் விரியும். இவையே விரதங்கள் முதலிய விசேட நிகழ்ச்சிகளாம்.

## கிரியை : பரார்த்த பூசை

கோயில் பூசையை, அது நிகழ்த்துதற்குரிய அதிகாரம் பெற்ற ஒருவரே நிகழ்த்துவதும் ஏனையோர், இப்பூசையை அவ்வப்போது குழுமித் தரிசித்தலும், ஆகமமரபில் ஆலயங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பாரம்பரியம். எனவே, இறைவன் வெளிப்பாடு விசேடமாக நிகழும் இடத்தில் இறைவனது சாந்நித்தியத்தினாலீர்ப்புண்டு பெருமளவினா் குழுமியிருக்கும் சூழ்நிலையில் யாவரும் தரிசிக்கும் அமைப்பில், ஒருவர் நிகழ்த்தும் பூசை, **பரார்த்த பூசை**[53] எனப்படலாயிற்று. பரார்த்தபூசை நிகழ்த்துபவர், ஆத்மார்த்தபூசையை தமக்காக நிகழ்த்திய பின்னரே பரார்த்த பூசை நிகழ்த்துவதற்குரியவராவர். பரார்த்த பூசை நிகழும் இடமாகிய கோவிலில், இறைவன் வெளிப்பாடு முனைப்பாக இருப்பதனால் அதே அளவிற்குச் சாந்நித்தியம் பொருந்தும் சாத்தியத்தை எதிர்பாராத ஆத்மார்த்த பூசையின் பின்னர், பரார்த்த பூசையில் ஒவ்வொருவரும் ஈடுபடுவது அத்தியாவசியமாகின்றது.

## கிரியை என்னுங் கலை

சமயம் வளர்த்த கலைகளுட் பெருஞ்சிறப்பு வாய்ந்தது கிரியை என்னும் கலை. கிரியை நிகழ்த்துவதில் திறமை ஒரு கைதேர்ந்த கலைஞனுக்கே உரியது. கல்லாலோ செம்பாலோ உருவாகிய சிலை இறைவனாகத் தெரிவதற்கு, இவன் திறமையே காரணம்.[54] இவன் கிரியையாற்றும் கலையின் வண்ணமே சிலைக்கு உயிர் ஊட்டுகின்றது. கிரியையைத் திறம்பட நிகழ்த்துபவருக்குப்

பரத நாட்டியத்தில் கைதேர்ந்த கலைஞருக்குரிய ஆற்றல் இருத்தல் அவசியம். பரதநாட்டியக் கலைஞரோ, நாடகபாத்திரம் ஏற்று நடிக்கும் நடிகரோ, தம் **அபிநயத்தால், ரசாநுபவங்களையும் , பாவங்களையும்,** தோற்றுவிப்பவர். கிரியைகளில் கைதேர்ந்தவனும், தன் திறமையினால் **பக்தி , சாந்தம்** முதலிய **ரசாநுபவங்களையும்**, இறைவன் சிலையில் **ஆவிப்பாவமாகும் பாவாதிகளையும்** தோற்றுவிப்பான். கிரியை நிகழ்த்துபவன், பாவனையை வெளிப்படுத்துவதில் திறமை பெறுதல் அத்தியாவசியம். **சாகித்தியத்திற்**கேற்ப நாட்டிய நடனாதிகளை நிகழ்த்தும் கலைஞர், சாகித்தியத்தை அனுசரித்துச் சாகித்தியத்தில் வரும் பல நிகழ்ச்சிகளையும், பல பாத்திரங்களையும், **பாவனை யினால்** , கற்பனையினால் தன்னுடனிணைத்துக் கொண்டு தன்னுடன் உண்மை யாகவே அவ்வப்பாத்திரம் இருத்துவிக்கப்படும் கற்பனைச் சூழ்நிலையில் தாக்கங்களை, பாவங்களைத் தன் **முகபாவங்களால் தத்ரூபமாக** வெளிப்படுத்தும் வேளை ரசிகர்கள் உள்ளம் நெகிழ்ந்து, அந்நிகழ்ச்சிகளில் நெருக்கமாக ஒன்றிவிடுவர். தனியொரு கலைஞரே பல பாத்திரங்கள் இணைந்து நிகழ்த்த வேண்டிய நிகழ்ச்சியில், ஏனைய பாத்திரங்களைக் கற்பனையில் தன்னுடன் இணைத்துக் கொண்டு, அவ்வாறு இணைந்த நிலையில், கற்பனையாகவே நிகழ்ப வற்றிற்குகேற்பத் தன் முகபாவங்களால் விளைவுகளை ஏற்படுத்துந் திறமை, நாட்டிய நாடகங்களில், இன்றியமையாது வேண்டப்படும். இவ்வாறே கிரியை நிகழ்த்துபவனும், **பாவனை**[55] மூலம் தெய்வத்தின் **சாந்நித்தியத்தை** வரவழைத்துத் தகுந்த சூழ்நிலையையும் **பாவனை யால்** உருவாக்கி, "இறைவன் வழிபாட்டிற்குரிய திருவுருவத்தில் **சாந்நித்தியம்** கொண்டு எழுந்தருளும் நிலையை வருவிக்கும் திறமை வாய்ந்த கலைஞன்" என்னும் பாராட்டுக்கு உரியவனாகின்றான். நாட்டிய நிகழ்ச்சி நிகழ்த்தும் கலைஞன், ரசங்களையும், பாவங் களையும், மாறி மாறித் தோற்றுவிக்கும் முறையை, **அபிநயம்** என்பர். கிரியை நிகழ்த்துபவரும், பக்தி என்னும் ரசத்தை வழிபடுவதற்காகக் குழுமியுள்ளோரிடம் தோற்றுவிப்பதும் ஒருவகை **அபிநயமே**. நாட்டிய நிகழ்ச்சியில், இன்றியமையாப் பின்னணியாக அமைந்து, நிகழ்ச்சி யைத் தொடர்ச்சியாகப் பொருட்செறிவு மிக்கதாக நிகழ உதவுவது **சாகித்தியமே.** இதேபோன்று கிரியை நிகழ்ச்சிகளில், அவ்வாறே பின்னணியாக அமைந்து அவற்றைத் தொடர்ச்சியாக நிகழச்செய்வன அவ்வப்போது பிரயோகம் பெறும் **தியான சுலோகங்கள்.**

கலைஞன், முகபாவங்கள்ால் வரவழைக்கும் பாவனைகளை, மேலும் நிறைவு செய்ய அவனுக்கு அனுசரணையாக இருப்பன **முத்திரைகள்**[56]. கண் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட முகபாவங்களுடன் இணைந்து, ரசாநுபவங்களை வருவிப்பதற்கு, முத்திரைகள் பெரிதும் துணை நிற்பன. முத்திரையின் பின்னணியைச் சற்று அவதானித்தால், முத்திரையின் பயன் என்ன என்பது தெளிவாகும். மிகவும் அதிகமான தேவை ஏற்படும்பொழுது, ஒருவனை எத்தனையழுத்தமாக வாவென்க் கூவியழைத்த பின்னரும் கூவியழைப்பவன், திருப்தியுறாநிலையில், இருகைகளையும் பலமாக அசைத்துக் கூவுதலுடன் இவ்வழுத்தம் பெற்ற சைகையையும் காட்டும் நிகழ்ச்சியிலே, வா என்ற ஒலிதரும் வருதற் பொருளை உணர்த்துவதற்குக் கை அசைவு, என்னும் முத்திரையும் துணை நிற்கும் வேளை, வருதற்குரியவன் மனதில் விளக்கம் தெளிவாகவும் உறுதியாகவும் எழுந்து, 'வருதல் என்னும் நிகழ்ச்சி விரைவுபடல் வேண்டும்', என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. சாதாரணமாக, வாழ்க்கையில் பேசும் பொழுது பேச்சுடன் சைகைகளாகிய முத்திரைகளும் இணையக் காண்கின்றோம். மனதில் பாவனையால் பெருகும் உணர்ச்சிப் பெருக்கு, முகபாவங்களாக வெளிப்படுவதுடன் அமையாது, மெய்ப்பாட்டின் ஓரமிசமான **கை அமைதிகளால்** - முத்திரைகளால் - வெளிப்படுவதோ, முத்திரையின் சுருக்கமான வரலாறாகும்.

இம் மெய்ப்பாடு, உடம்பில் பலவாறாக வெளிப்படக்கூடியதெனினும், கையின் அசைவுகளே, வெளிப்பாட்டில், பெரும்பகுதியாயமைந்துவிடுகின்றன. கருத்துக்களுக்கு வடிவந்தரும் கையமைதி, ஒரு கலையாக நெறிப்படுத்தப்பட்டு, இன்னகருத்து இன்னவகையில் அமையும் கையமைப்பால் உணர்த்துதற்குரியது எனச் சாத்திர ரீதியாக வரையறுக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு நெறிப்படுத்தப்பட்ட முத்திரை, கிரியைகளில், பெரிதும் பயிலும் அமிசமாக விளங்கக் காண்கின்றோம்.

பரதநாட்டியத்திற் பயின்றுவரும் பல முத்திரைகள், கிரியைகளிலும், அதே பெயர்களைக் கொண்டு, அதே கையமைதிகளில் பிரயோகம் பெறுவது சிந்திக்கற்பாலது. இதுவரை கூறப்பட்ட கலை,

பரார்த்த பூசை நிகழ்த்துபவரிடையே வளருதற்குரிய கலையாகும். ஆத்மார்த்த பூசையுடன் மிகச்சிறுஅளவில் இது தொடர்பு பெறுவது ண்டெனினும், பரார்த்த பூசையிலேயே, இதன் தேவையும் அதை யொட்டி இதன் வளர்ச்சியும் பெருகுகின்றன.

ஆத்மார்த்த பூசையின் பின்னரே, பரார்த்த பூசை நிகழ்வது முறையானதாலும், பரார்த்த பூசையில், வெளியில் நிகழ்த்தப்படுவது போன்றே உள்ளத்தில் இறைவனை இருத்திப் பூசைகள் மானசிகமாக நிகழ்த்தி,[57] **அந்தர்யஜனம்** எனப்படும் இம்மானசிக பூசையினிறுதியில் இறைவனநுமதியுடன் பரார்த்தபூசை நிகழ்வதாலும், இப்பூசை வெறும் அபிநயமே, நடிப்பே என்ற பேச்சுக்கே இடமில்லை.

## சமயம் கலைகளைத் தோற்றுவித்தமை

வாழ்க்கையோடு நெருக்கி இணைந்த சமயம், மக்களிடை, என்றும் பயிலும் வாய்ப்பினதாய் பன்னெடுங்காலம் நிலவி வருவ தெனினும், கலைகள் பொலியும் சிறப்புடன் ஓங்கிவளரும் வாய்ப்பு, சமயம் பெரிதும் பயிலும் கோயில்களிலேயே தோன்றிப் பண்பாட்டை சிறக்க வைத்தது. இறைவனின் விசேடமான வெளிப்பாட்டை உணரத் தரும் ஆலயங்களில், இவ்வெளிப்பாட்டின் காரணமாக, வழிபடும் நோக்குடன் திரண்டுவரும் பல்லாயிரக்கணக்கினரின் மனதில் இறை உணர்வு பதித்து, பக்தி பெருக்கும் சூழ்நிலை அமைய வேண்டிய தேவையை நோக்காகக் கொண்டு, ஆலயங்கள் இயங்க வேண்டிய விதிமுறைகளாக ஆகமங்கள் வகுத்து விதித்த வழிகளுக்கமையக் கிரியைமரபு உருவாகிக் கலைகளைத் தோற்றுவித்தது.

ஆலயங்களில் நிகழும் முக்கிய நிகழ்ச்சி வழிபாடு. இதே ஒரு கலை என்று விதந்து போற்றும் சிறப்பு வாய்ந்தது. வழிபாட்டிற்கு இன்றியமையாதது இறைவன் திருவுருவம். இதனால் திருவுருவம் அமைக்கும் **விக்கிரகக் கலை**[58] தோன்றலாயிற்று. திருவுருவங்களைத் கல்லிற் சமைக்கவும், மரத்தில் செதுக்கவும், உலோகத்தில் வடிக்கவும், சுதையில் உருவாக்கவும் ஆற்றல் படைத்த சிற்பிகள் பரம்பரையாகத் தங்கள் கலையைப் பரப்பி வந்தார்கள். இறைவன் தியானமும், தூய சிந்தனைகளும் இவர்கள் உள்ளத்தில் நிறைந்தி

ருந்ததனால், இவர்கள் ஆக்கிய உருவங்களும் தெய்வாமிசம் பொருந்தி விளங்கின. பல்லாயிரக்கணக்கான அமைப்புக்களில் இறை வனைக் கோலம் செய்து உருவாக்கும் விக்கிரகக் கலையின் பொலிவு, இந்துமதத்திற் போல், வேறெந்த மதத்திலும் சிறப்புற அமையவில்லை.

வழிபாட்டிற்காக உருவாக்கப்படும் விக்கிரகங்களை நிறுவுவ தற்கு **ஆலயம்** தேவைப்பட்டது. இதையொட்டி வளர்ந்தது **கட்டடக் கலை**[59]. இக்கலை வல்லுநரான **ஸ்தபதிகளால்** நிர்மாணிக்கப்பட்ட பெருங்கோயில்களும், தூண்களும், விமானங்களும், வானளாவிய கோபுரங்களும், மதிற்சுவர்களும், புராதன கோயில்களை அணிசெய்து இக்கலையிற் கைதேர்ந்தவர்களின் ஆற்றலைப் பறைசாற்றுவதுடன், மேனாட்டவர்களின் பெருவியப்புக்கும் பாத்திரமாயும் நிற்கின்றன.

கோயில் **விமானங்களிலும், கோபுரங்களிலும்**, தூண்களிலும், தெய்வத் திருக்கோலங்கள் சிற்பநூல்கள் கூறும் முறைக்கமையப் பலவகைக் கோலங்களில் தோற்றம் பெற்றுள்ளன.[60] இறைவன் இவர்ந்து பவனி வருவதற்காக, வகை வகையாக வாகனங்கள மைக்கும் கலையும் வளர்ந்தது. இவற்றையெல்லாம் வனப்புற அழகுறுத்த, **ஓவியக்கலையும்**[61], இதையொட்டி வளரலாயிற்று. கோயிற்சுவர்களில், வீதியை வலம்வரும் அடியவர் மனதிற் படியக் கூடியவாறு, இறைவன் பெருமையைச் சித்திரிக்கும் சித்திரங்களைத் தீட்டியும், ஆலயங்களில் ஓவியக்கலைஞர், தம் கலையை வளர்த்தனர்.

இந்துக்களின் **இசைக்கலை**[62] வளரக் கோயில்களே நிலைக் களனாக விளங்கி வந்தன. இசைப் பாடல்கள் புகழ்பாடுதலையே பொருளாகக் கொண்டவை. புகழ்ந்து பாடுவதற்குத் தகுதி வாய்ந்தவன் இறைவனொருவனே. மனிதனைப் பற்றிச் சிறிது போற்றிக் கூறும் பொழுதே அது பொருத்தம் அறவே அற்றவாறு அளவுமீறி விடுகின்றது. தெய்வத்தைப் பற்றி எவ்வளவு அதிகமாகக் கூறின பின்பும் இன்னும் கூறினாலும் மிகையாகாது எனத் தோன்றுகின்றது. ஏத்திப் புகழ்ந்து பாடுவதற்குரிய ஒருவனான இறைவன்மீது பாடும் மரபும், கோயிலை அனுசரித்தே உருவாகி, இசைக்கலையின் புதுப் புதுவளர்ச்சி நிலைகளைத் தோற்றுவித்தது. **பண்ணிசை**, கோயில்

களைக் காரணமாகக் கொண்டு வளர்ந்ததே, தனிவரலாறு. இசைக்கருவிகளும்[63] கோயிலில் இசைக்கலையைப் பெரிதும் வளர்த்தன. இசைக்கலையைக் கோயில் வளர்த்த முறையே தனி ஆய்விற்குரிய விடயம். தெய்வங்களே இசைக்கருவிகளைக் கையிலேந்திய கோலத்தில் அமைவது, இசைக்கலைக்கு அதியுன்னதமான தெய்விகப் பின்னணியைத் தருகின்றது.

கோயில்களே வளர்த்த கலைகளுள், முன்னணியில் நின்றதும், அங்கு பரம்பரையாக நெடுங்காலம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்ததுமான கலை, **நாட்டியக் கலையே.**[64] சூழ்நிலை காரணமாக இக்கலை கோயில்களினின்றும், இன்று மறைந்துவிட்டது. இந்துப் பெரும் தெய்வங்களே ஆடற்கலை பயிலும் அமைப்பில் சித்திரிக்கப் பட்டிருக்கக் காண்கின்றோம். இறைவனுக்கு நித்திய நைமித்திக வழிபாடுகளில் **நிருத்ய உபசாரம்**[65] நிரந்தரமான இடம் பெற்றிருந்தது.

## கோயிலில் இராசோபசாரம்

**பிராசாதம்**[66] என்ற சம்ஸ்கிருதச்சொல், **கோயில்** என்ற தமிழ்ச் சொல்லை முற்றிலும் நிகர்க்கும். இரண்டு சொற்களுமே, தனித்தனி, அரசன் வசிக்குமிடமென்றும், தெய்வங்களினுறைவிடம் என்றும்,இரு பொருள்களையுங் கொண்டவை. அரசன் இறைவன் ஆகிய இருவரும் ஒரே நிலையில் வைத்துப் போற்றற்குரியவர் என்பதை இது காட்டுகின்றது. அரசனின் தனிப்பெருங் கடமை குடிமக்களைக் காத்தல். வேண்டியவற்றைப் பெறச் செய்வதும், பயத்திலிருந்து பாதுகாத்தலும், அரசன் தெய்வம் ஆகியோருக்கு உரிய பொதுப்பண்புகள். அரசன் கண்கண்ட தெய்வமெனச் சாத்திரங்களே போற்றுவன.

ஆலயம், பல்லாயிரக்கணக்கான அடியவர் குழுமி வழிபடுதற்குரியவாறு பரார்த்த பூசை நிகழ்தற்குரிய இடமாக அமைய வேண்டுவதனால், இது, பெரிய நிறுவனமாக உருவாயிற்று என்பது முன்னர் கூறப்பட்டது. நாளடையில் ஆலயமே அகழிகளாற் சூழப்பட்டு அரண்மனையின் அமைப்பைப் பெற்றது. அரசனின் மாளிகையைச் சுற்றி எழவேண்டிய உயர்ந்த மதிற்சுவர்களும், கோயிலைச் சுற்றி

எழுந்தன. அரசமாளிகையின் கேந்திரங்களாக அமையும் நான்கு வாயில்கள் போன்று, கோயிலில் நான்கு திசைகளில் நான்கு வாயில்களும், அவ்வாயில்களை அழகுசெய்யும் வானளாவிய **கோபுரங்களும்**,எழலாயின. அரசமாளிகையில், அரசனுடைய தேவைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ப, ஆங்காங்கு பரிசனங்கள் புடைசூழ இருப்பதற்காகப் பலவிதமான அமைப்புக்கள் இருப்பதை நிகர்த்துப் பரிவார தெய்வங்ளைச் சுற்றிலும் நிறுவுவதற்காகக் கருவறையைச் சுற்றிலும் பல சிற்றாலயங்கள் அமைவன. அரசன் கொலுவீற்றிருக்கும் **ஆஸ்தானமண்டபம்** பெருமளவிற் குழுமும் பொதுமக்கள் கூடி அரசனைத் தரிசிப்பதற்கு ஏற்றவாறு விஸ்தீரணமாகவும் கலையழகு பொலியவும் அரண்மனையில் அமைந்திருப்பது போன்று, பக்தர்கள் பெருமளவிற் கூடி இறைவனைத் தரிசிப்பதற்கேற்ற அமைப்பைக் கொண்டு **வசந்த மண்டபம்** விளங்கும். அரசன் உறைவிடத்தில் வாயில்களில் காவலர் காத்து நிற்பது போன்று, கோயில்களிலும் வாயில்களில், **துவார பாலகர்** உயர்த்தி நீட்டிய சுட்டுவிரல் காட்டி எச்சரித்து நிற்கும் அமைப்பில் காணப்படுவர். அரசன் அரண்மனையைச் சுற்றிக் குடிமக்களும் அங்கங்கே அங்காடிகளும் அமைவதை நிகர்த்துக் கோயிலைச் சுற்றிலும் பட்டணமே உருவாகக் காண்கின்றோம். மதுரைக் கோயில் இவ்வமைப்புக்குச் சிறந்ததோரெடுத்துக்காட்டு. அரசர்களுக்குரியது **கொடி.** இறைவனுக்கும் உரிய சின்னம் பொறிக்கப்பட்ட கொடி உண்டு. **கொடிமரம்** கொடியேற்று வைபவம் **தேர்** ஆகியவை அரசனுக்கும் உண்டு ; இறைவனுக்கும் உண்டு. அரசர் அவ்வப்போது வீதிகளில் **பவனி** வருவதை நிகர்ப்பது கோயிலில் இறைவன் கொண்டருளும் **திருவுலா.** அரசனுடைய பவனியில் அவனுக்கே உரியதான ஆடம்பரங்களான **கொடி, குடை, ஆலவட்டம், சாமரை, தீவட்டி, கட்டியம்** ஆகியன, கோயில் இறைவனுலாவிலும் இடம்பெறுவன. வசதிபடைத்த பெருங்கோவிலில், யானை, குதிரை, ஒட்டகம் முதலியனவும் அணிவகுத்து முன்னே செல்வன. பேரிகையும் ஊர்வலத்தின் முன்முழங்கிச் செல்லும். வாத்தியங்களிலிருந்து எழும் இன்னிசையும் முழங்கும் கலைநிகழ்ச்சிகளும் அரசன் பவனியிற் போன்று இறைவன் திருவுலாவில் நிகழக் காண்கின்றோம். பவனிவரும் வேளையில் மட்டுமல்லாமல், அருளுமுகமாக மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் வேளையிலும், தெய்வத்திற்கு மேல் கவிந்திருக்கும் **குடையும்,**

இருமருங்கிலும் இரட்டப்படும் **சாமரங்களும்**, அரசன் இதேபோன்ற உபசாரங்கள் பொலியக் கொலுமண்டபத்தில் சிங்காசனத்தில் குடைக் கீழ் கொலுவீற்றிருக்கும் காட்சியைக் கண்முன் கொணர்ந்து நிறுத்தும். இறைவன் பவனிவரும் வேளையில், கட்டியங் கூறுபவர். கட்டியத் துக்குரிய **செங்கோலை** ஏந்திநின்று, இறைவன் பவனிவந்து கொண்டி ருப்பதைக் கூறி எச்சரிக்கும் நிகழ்ச்சி, அரசன் பவனிவரும் நிகழ்ச் சியை முழுவதாக நிகர்க்கும். அரசன் பவனிவரும் பொழுது **நெற் பொரியையும்** நறுமணங்கமழும் **மலர்களையும்** தூவி வாழ்த்திக் கௌரவிப்பது போன்று, இறைவன் திருவுலாவிலும் நிகழ்வது மரபு. இறைவன் திருவுலாக் கொள்ளும் வேளை, அரசனை முற்றிலும் நிகர்த்துப் **பட்டாடைகளாலும்**, விலையுயர்ந்த **மணிகள்** பதித்த **பொன்னணிகளாலும்**, முக்கியமாக அரசருக்கே உரிய **கிரீடத்தாலும்**, வகைவகையான **மாலைகளாலும்** அலங்கரிக்கப்பட்டு பவனி வருவது அவதானத்திற்கு உரியது.

அரச மாளிகையிற் போன்று, ஆலயங்களிலும், பரம்பரை யாகப் பலவகைப் பணியாளர்கள் தத்தம் கடமைகளை ஆற்றுவதற் காகச் **சர்வமானியங்கள்** வழங்கப்பட்டுள்ளன. அரசனவையை அணி செய்யும் **ஆஸ்தானகவிஞர்** போன்று, கோயிலிலும், கலைஞர்கள் கலைப்பணி புரிவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.[67] சுருங்கக்கூறின், அரசனுறைவிடமாகிய மாளிகையிலுள்ள ஒவ்வோரமிசத்திற்கும் நேரி தான அமைப்பைக் கோவிலும் கொண்டமைவது எனலாம். கோவிலில் பிரமாண்ட அமைப்புக்கும் நிதி நிலைமைக்கும் ஏற்ப இவ்வமிசங்கள் மிகுந்தும் குறைந்தும் இடம்பெறுவன. அரசனைத் தரிசித்துத் தம் பெருமதிப்பைக் காட்டும் முகமாகக் குறுநில மன்னர்கள் **காணிக்கை** செலுத்துவதை நிகர்த்துக் கோயில்களிலும், அடியவர்கள் இறைவ னுக்குப் **பொன்னையும், மணியையும்,** உண்டியலில் **காசையும்** காணிக்கையாகச் செலுத்துவதைக் காண்கின்றோம்.

அரசர்களுக்குப் பெருமை ஈட்டித் தருவது, **வீரம்** என்னும் தலையாய பண்பு. வீரத்தை வெளிப்படுத்துவன, அவர்கள் போர்க் களத்தில் ஈட்டும் வெற்றிகளும், அவர்களின் வீரதீர பராக்கிரமச் செயல்களுமாகும். அரசமாளிகையின் அமைப்பைப் பெற்ற ஆல

யத்தில் அரசனுக்குரிய உபசாரங்களுக்குப் பாத்திரமாகி எழுந்தருளி யிருக்கும் இறைவன் இயற்றியதாகக் கூறப்படும் வீரச் செயல்கள், பலப்பல. **அட்டவீரட்டத் தலங்கள்**[68] என்று கூறப்படும் எட்டுத் திருத் தலங்களிலேயே இப்பெரும் வீரச்செயல்கள் எட்டு நிகழ்ந்ததாக ஐதிகம் பேசுகின்றது. இவ்வீரச் செயல்களுடன் தொடர்புபடும்படி **மண்டையோட்டு மாலை, யானைத்தோல், புலித்தோல்** முதலியன **வெற்றிச் சின்னங்களாக** அணியப்படுவதையும், தெய்வங்களின் கரங் களில் யுத்தசந்நத்தரான வீரர்களின் கைகளிலிருப்பன போன்று **வில், அம்பு, கேடயம், ஈட்டி, வேல்** போன்ற பல்வகைப் படைக் கலங்கள் விளங்குவதையும் அவதானிக்கும்பொழுது, அரசனுக்கும் தெய்வத்துக்கும் இடையே நிலவும் நெருங்கிய ஒற்றுமையைக் காணலாம். கோவிலில் நிகழும் இறைவழிபாட்டில் இறை எனப்படும் அரசனுக்கு உரிய உபசாரங்கள் நிகழ்த்துவது, விரிவான ஆய்வுக் குரியது.

## குரு

இந்துப் பண்பாட்டிற்குப் பெருமை தருபவர் **குரு**. அறியா மையை அகற்றி அறிவைப் பெருக்குவதில் இவர் திறமை வாய்ந்தவர். அறியாமையை இருளுக்கும், அறிவை ஒளிக்கும் ஒப்பிடுவது வழக்கம். அறியாமை என்ற இருளினால் ஒளிமழுங்கிய கண்களை, ஞானம் என்ற துலக்குமாற்றல் வாய்ந்த கருவியால் திறக்க வல்ல திறமையாளன், எனத்தோத்திரமொன்று குருவை விதந்து கூறு கின்றது.[69] எல்லாத் தெய்வங்களும் குருவுள் அடக்கம்[70]. எல்லோரும் பின்பற்றி ஒழுகுவதற்குத் தன் ஒழுக்கச்சிறப்பினால் வழிகாட்டியாகத் திகழ்வதனால், இவர் **ஆசாரியர்** எனப்படுவர். அறிவையே கருவியாகக் கொண்டு ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டுவதனால், **தேசிகர்** எனப் படுவர். **"ஆசார்ய தேவோ பவ"**[71] என்ற **சுருதி வாக்கியம்** குருவைத் தெய்வத்தின் நிலையில் வைத்துப் போற்றுகின்றது. இலௌகிக நிலையில், முற்றிலும் உலகியல் தொடர்புள்ள அறிவு வகைகளுக்கு விளக்கந்தந்து, அவ்வத்துறையில் அறிவுப்பெருக்கத்துக்கு காரண மாயிருக்கும் ஆசிரியர்களும் குரு எனப் போற்றப்படுவதற்கு சமய பின்னணியே காரணம். இவ்வாறு இலௌகிக நிலையிலே, அறிவு

விளங்கக் கல்வி புகட்டும் ஆசிரியர் "எழுத்தறிவித்தவன் இறைவ னாவான்" எனக் கௌரவம் பெறுகின்றனர். இது இவ்வாறாயின், ஆன்மிக நெறி காட்டும் குருவின் பெருமைபற்றிப் பேசியும் அமையாது. குரு வழங்கும் அறிவைப் பெறுவது மட்டும்மன்றிக் குருவுடன் வாழ்ந்து பயிலவேண்டிய வாழ்க்கை முறை சிறந்ததென்பதாலே **குருகுல வாசம்**[72] இந்துக்களின் பாரம்பரிய வழக்கமாக இருந்து வந்தது. குருகுலவாசம் செய்பவன் குருவின் மனநிறைவையும், பிரீதியையும், அன்பையும், பெறும் நோக்குடன் பணிவிடைசெய்து தன்னைப் பெரிய தொரு பயிற்சிக்குப் பாத்திர மாக்கிக் கொள்ளுகிறான்.

"குருவுக்கு இழைக்கும் துரோகம் மிகவும் பாரதூரமானது ; பரிகரிக்கமுடியாதது" என்ற கருத்து குருமீது பெருமவதானத்துடன் செலுத்த வேண்டிய பயபக்தியைச் சுட்டுகின்றது. இறைவன்பால் அபராதம் நிகழ்ந்தால் குருவை நாடி, அவரிடமிருந்து அதை ஈடு செய்ய வழிவகைகளைப் பெறலாம். குருவிற்கு அபராதம் செய்யில், புகலிடம் யாது தான் உளது? என்ற பொருள் பொதிந்த சுலோகம் குருவின் பெருமையை மேலும் உயர்த்துகின்றது.

**குருவருள்**[73] பற்றிச் சித்தாந்த நூல்கள் விரித்துக் கூறு கின்றன. குருவினால் வழங்கப்பட்ட **தீட்சை** முதலிய **சம்ஸ்கார ங்களால்** தகுதி பெற்றுச் **சிவாசாரியராகி**, ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள் இயற்றுபவரை ஆகமங்கள் குரு எனப் போற்றும்[74]. இந்து மதத்தில் குருவுக்கு உந்நதமான இடமுண்டு என்பதைத் தெய்வங்களே குருவடிவில் எழுந்தருளி உணர்த்தி நிற்கின்றன[75].

## சமயமும் தத்துவமும்

சமயமும் தத்துவமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வன. இவையிரண்டும் இயைந்து இணையும் சிறப்பு இந்துப் பண்பாட்டுக்கே உரியது. சமயம், நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இவ்வடிப்படை, உலகச் சமயங்களெல்லாவற்றுக்குமே பொதுவானது. தெய்வத்தை ஊனக் கண்ணால் காணமுடியாத நிலையில்[76], தெய்வம் உண்டென்ற நம்பிக்கை, தெய்வத்தின் பேராற்றலில்

நம்பிக்கை, "தெய்வத் திருவருளாலேயே எல்லாம் நிகழ்கின்றன ; தெய்வத்தாலேயே எமக்கு எல்லாவிதமான உய்வும் உண்டு", என்ற நம்பிக்கை, தெய்வத்தைவிட வேறு புகலிடமில்லை என்பதில் உறுதிப் பாடு, ஆகியன சமயங்களெல்லாவற்றுக்கும் வேண்டப்படும் பொது அமிசங்கள்.

இந்நிலையில், இந்து சமயம், இறைவனை அணுகவும் அவன் திருவருளைப் பெறவும் வல்ல உபாயங்களை வழங்கித் தன் எல்லைக்குள் நின்று உரியவாறு வழிகாட்டும். தெய்வம் பற்றிய பல விவரங்களை எங்கள் நிலைக்கேற்ப, இந்திரியங்களால் கிரகிக்கக் கூடிய வகையிலும், அகக் கண்ணால் காணுமாற்றல் அற்றவர்க்குப் புறக் கண்ணால் கண்டனுபவிக்கக் கூடிய திருவுருவங்களாகவோ, ஓவியங்களாகவோ, வடிவம் தந்து, கண்ணால் நேரே பார்க்கவும், வழிபடவும், கூடியவகையிலும் வாய்ப்புக்களை இந்துசமயம் அமைத் துள்ளது. தெய்வங்களின் குணாதிசயங்களையும் குணாதிசயங்களுடன் தொடர்பு கொண்ட செயல்களையும் விவரித்துத் தெய்வங்களை நெருங்கி உணரும் வகையில் தெய்விக நிகழ்ச்சிகளை வருணிக்குந் திறமை இந்துசமயத்துக்கே உண்டு. இத்திறமை, இதிகாச புராணங் களில் விளங்கக் காணலாம். சமயம் அநுட்டானத்திலேயே வெளிப் படுவது. இவ்வனுட்டானங்களை முன்னோர் கையாண்ட வழியில் நின்று கடைப்பிடித்தல் எளிது.

சமயங் காட்டும் இறைவன் பற்றிய விபரங்கள், படிப்படியாகக் கிரகிக்க முடியாத நிலையை அடைவதையும், சமய நூல்களில் உணர முடிகின்றது. இந்நிலையே தத்துவ சிந்தனை பிறப்பதற்கு வழிகோலுவது எனலாம். சமயநிலை நின்று அநுபவம் வளர்த்துக் கொண்டவர்களுக்குத் தத்துவ விளக்கங்களும் உட்பொருள்களும் படிப்படியாகத் தானே தெளிவாகும். ஆழ்ந்த விளக்கத்தை அடிப்ப டையாகக் கொண்ட நுண்ணறிவும், சிந்தனைகளை ஓடவிடு வதன் மூலம் கூறப்படும் பொருளைப் பல கோணங்களில் இருந்து சிந்திக்கும் வாய்ப்பும் ஏற்படும். தத்துவ சிந்தனையின் எல்லைக்குள் நுழையும் பொழுது தத்துவ விசாரணையின் ஆரம்ப கட்டத்தில் காலெடுத்து வைக்க நேரிடும். விசாரணை தொடக்கத்தின் அறிகுறி சந்தேகம்.

சந்தேகத்தின் விளைவு கேள்விகள். சந்தேகம் இல்லையெனின் கேள்விக்கே இடமில்லை. சமயநிலை நிற்கும்பொழுது, நம்பிக்கை அடித்தளத்தில் பரந்து படர்ந்து விளங்குவதனால், சந்தேகத்திற்கும்; எனவே, கேள்விகளுக்கும் இடமில்லை. இறைவனுளன் என்பது உண்மை நிலையாயினும் அந்த உண்மை நன்கு தெரிந்த தொன்றா யினும், அவ்வுண்மை நிலையினை உறுதிப்படுத்தும் முகமாக, அவ்வுண்மை பற்றிப் பலசந்தேகங்களைப் பிறப்பித்துப் படிப்படியாக அவற்றைக் களையும்பொழுது உண்மை, அநுபவத்தின் பாற்படும். இவ்வாறு உண்மையை அநுபவத்திற்குக் கொண்டு வருவதே இந்து தத்துவ விசாரணையின் நோக்கம்.

சமய குரவர்களருளிய தேவார திருவாசகங்களிலும் இறை வனது தடத்த இலக்கணமும் விரவிவரக் காணலாம். அங்கு சமயம் பேசும்நிலையில் தத்துவமும், தத்துவம்பேசும் நிலையில் சமயமும், மாறிமாறி இணைந்து வருவதனால்,ஒன்றை ஒன்று வளம் படுத்தி நிற்பதைக் காண்கின்றோம்.

மேல் நாட்டிலோவெனில், தத்துவமும் சமயமும் இருதுருவங் களாகி, ஒன்றோடு ஒன்று முரண்பட்டு நிற்கக் காண்கின்றோம். மேல்நாட்டிலும், பெரும்பாலான சமயங்களில் தத்துவஞானி, தெய்வநிந்தகனாக, சமய விரோதியாகக் கருதப்படுவன்.

தருக்க ரீதியாக உண்மைபற்றி விசாரணை செய்வனவே இந்து தரிசனங்கள்.[77] இவை, **சாங்கியம், யோகம், நியாயம், வைசே டிகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை** எனப் பெயர் பெறுவன. இவற்றுள் பூர்வமீமாம்சையும் உத்தரமீமாம்சை எனப்படும் **வேதாந் தமும்** நன்கு வாதிட்டுத் தருக்கரீதியாக முடிவுநிறுவும் நிலையிலும் சுருதிப் பிரமாணத்திற்கே உயரிய இடமளித்து, **ஆப்த வசனம், சப்தம்** என்ற பிரமாணங்களையே பலம்மிக்க சான்றுகளாகக் கருது வன. தத்துவ விசாரணை அமைப்பிலும் சமயப்பாரம்பரியம் சுவறிச், சமயமும் தத்துவமும் இயைந்து இணையும் அபூர்வநிலை, இந்துக் களின் தத்துவ விசாரணையை வேறுபடுத்தி அதற்கு ஒரு தனித்து வத்தை உரியதாக்குகின்றது. இந்துக்களின் பாரம்பரியத்தில் சமயமும் தத்துவமும் பிரிக்கவொண்ணாது இணைந்து நிற்பதைத் தொன்றுதொட்டு இன்றுவரை அவதானிக்க முடிக்கின்றது.

## புருடார்த்தங்கள்

இந்து மதத்திற்குத் தனிச்சிறப்பைத் தருபவை, **புருடார்த்தங்கள்.** இந்துமத நெறி நிற்பவன் ஒவ்வொருவனும் புருடனே. அர்த்தம் என்பது இலட்சியம் எனப்பொருள் பெறும். எனவே புருடார்த்தங்கள் என்பது இந்துநெறி நிற்போருக்கு உரிய இலட்சியங்கள் எனப்பொருள் தருகின்றது. சமயஅடிப்படையில் கூறப்படும் இலட்சியங்கள் வாழ்க்கையை சிறப்பானதாகவும், பயனுள்ளதாகவும், அமைய வழிவகுக்கும். ஏனைய சமயங்கள் பரவலாக வாழ்க்கையமையவேண்டிய முறையைக்கூறினும், இந்துமதமே திட்டமிட்டு வாழ்க்கையின் குறிக்கோள்கள் அமையவேண்டிய முறையைச் செவ்விதாகக் கூறுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்பதே இவ்விலட்சியங்களாகும். இவை இந்துக்களின் இவ்வுலக வாழ்க்கையை மட்டுமல்லாமல், மறுவுலக வாழ்க்கையையும், சிறக்க வைப்பன.

அறமெனினும் தர்மமெனினும் ஒன்றே. நாம் மேற்கொள்வதற்குரியதே **தர்மம்** எனப்படும். இவை எவை என்பதைச் சாத்திரங்கள் விவரிப்பன. சாத்திரங்கள் முறைப்படுத்தித் தருவது வேதம் கூறுவதையே. வேதம், தர்மத்தை மூலமாகக் கொண்டது, என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வறநெறி நிற்பதன் மூலம் வாழ்க்கையைச் செவ்விதாக அமைத்துக்கொண்டு பயனுற வாழலாம். அறநெறி நிற்பதற்கும், இன்பம் துய்ப்பதற்கும், பொருள் அத்தியாவசியமாக வேண்டப்படுவதனால், அறம் இன்பம் ஆகிய இரண்டின் நடுவே பொருள் இடம்பெறுமாறு வைத்துப் பேசப்படுகின்றது. இம்மையில் வாழ்க்கை சிறப்புற இம்மூன்று இலட்சியங்களும் கைகூடவேண்டும். இவை அமையவேண்டுமாற்றை வலியுறுத்தி விபரிக்கும் இந்துசமய நூல்கள், இம் மூன்றைவிட உயர்ந்ததான மறுமையாகிய வீடுபேறுபற்றி விரித்து, அதையே அதியுன்னத இலட்சியமாகக் குறிப்பிடுகின்றன. இம்மையை வெறுத்து ஒதுக்காது, இம்மைக்கும் மறுமைக்கும் தனியிடமளித்து, இவற்றை உயர் இலட்சியங்களாக, புருடார்த்தங்களாகக் கொண்டு வாழ்க்கையைத்திட்டம்வகுத்து, வாழ்க்கையை நெறிப்படுத்தும் தனிச்சிறப்பினது இந்துமதம்.

## மதபரிபாலனம்

இந்துமதம் பரந்த அமைப்பினாலும், பரந்த காலப் பரப்பினாலும் எல்லைமீறிப் பிரமாண்டமாக வளர்ந்த இடத்தும், இன்றுவரை பேணிப்பாதுகாக்கவோ வளர்க்கவோ பரம்பரையாக மன்னர்களினதோ நிறுவனங்களினதோ புரவலர்களெவரினதோ ஆதரவு எதுவுமின்றி நெடுங்காலமாக, தலைமுறை தலைமுறையாக வலிமைமிக்க மதமாக பலரைக்கவரும் மதமாக விளங்கிவருவது ஆச்சரியத்துக்கும் பெருமைக்கும் உரியதே.

இந்து மதத்தின் உள்ளீடாக அமைந்திருக்கும் ஒவ்வொரு உள்ளுறுப்பும், அதன் பண்பாட்டைப் பிரகடனப்படுத்தவல்ல ஒவ்வொரு அமிசமும், பொருள் பொதிந்ததாகவும், ஆன்மிகம் சுவறியதாகவும், நிரந்தரமான பெறுமதிவாய்ந்ததாகவுமாகி இருப்பதனால் இம்மதத்திடம் இயல்பாகப் பொருந்திய இச்சிறப்புக்களே ஒருவகை ஆதரவும் வேண்டப்படாதவாறே தன்னியல்பு கொண்டே, எல்லையற்றவாறு, நிலவவல்ல மதமாக, என்றும் தன்காலில் தானே நிலைநிற்கவல்ல இயல்பை வழங்கியுள்ளன. இது இந்துமதச் சிறப்பின் உச்சநிலை[78].

## தனி ஒருவர் இணைக்கப்படாமை

பல்லாயிரக்கணக்கான இருடிகள், தத்துவஞானிகள், அருளாளர்களாயினோர், காலத்துக்குக் காலம் தோன்றிச் சமய நூல்களும் தத்துவ நூல்களும், முன்னமேயிருந்த வேதக் கருப் பொருட்களுக்கு விளக்க நூல்களாக உருவாவதற்குக் கருவிகளாக இருந்தார்களேயன்றி, அவர்கள் தாம் வழங்கியவற்றுக்கு மூலகர்த்தாக்களாக ஒருபொழுதும் உரிமை கோரியதில்லை. சுருங்கக்கூறின், தனியொருவரின் பெயர் இந்துமதத்தின் எவ்வகையான அம்சத்துடனாவது இணைக்கப்பட்டு அவ்வமிசத்தை அவரே தோற்றுவித்தார் என்று பேசப்படும் மரபு கிடையாது[79]. மூலமாகிய வேதங்களில் வேரூன்றி பலவாகப் பெருகிய சார்புநூல்களும் அவற்றுக்கு விளக்கங்கூறும் வகையில் எழுந்த சமயக் கருத்துக்களினதும் தத்துவக்கருத்துக்களினதும் பெருக்கங்களான நூல்கள் பலவும் தோன்றிப் பெருகி வருவதையே மீண்டும் மீண்டும் காண்கிறோம்.

## இந்து என்றால் சைவமே

தென்னாட்டுச் சைவசமயத்தின் அமைப்புப்பற்றி இப்பொழுது தொடர்ந்து வழங்கப்படும் கருத்து, இந்நினைவுரைக்குச் சூட்டப்படும் முடியாக அமைந்து, இவ்வுரையை நிறைவு செய்யும். அதைச்சற்று அவதானிப்போம்.

பாரத நாடெங்கணும் பரந்த சைவம், காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிவரை அநுட்டிக்கப்பட்டு வருவதெனினும் தென்பாரதத்தில், இது தனக்கெனவுரிய பெருஞ் சிறப்புடன் விளங்கி வருகிறது. **தென்னாடுடைய சைவத்தின்** அமைப்பு, பல வகைகளிலும் அகன்று விரிந்து விளங்குவது. இச்சைவ வழிபாட்டு முறையில் காணபத்யம், கௌமாரம், சாக்தம் ஆகிய மதங்களும் அவற்றின் வழிபாட்டு முறைகளும் பாரம்பரியமும் உள்ளடங்கக் காண்கிறோம். தென்னாட்டில் மட்டுமே, சைவ வழிபாட்டு நிலையங்களாக விளங்கும் முழுமைபெற்ற சிவாலயங்களில் பரிவாரங்களாக நிறுவப்பட்ட சூரியன், கணபதி, முருகன், சக்தி, விட்டுணு ஆகிய தெய்வங்களுக்குத் தனித்தனி ஆலயங்கள் இருப்பன. இவ்வாறிருப்பது சைவம் இப்பிரிவுகளெல்லாவற்றையும் தன்னுள்ளடக்கித் தனிப்பெருஞ் சமயமாக விளங்குவதைக் காட்டுகின்றது.

**தென்னாட்டில்** பெரிதும் பயிலும் **சைவசித்தாந்தத்தில்**[80] கைவந்தவன், பாரத நாடெங்கணும் பயின்று வரும் எல்லாத் தத்துவ தரிசனங்களிலும் பயிற்சியுடையவனாகின்றான். ஏனெனில், சைவ சித்தாந்த உண்மைகள் எடுத்துக் கூறப்படும்பொழுது அவ்வுண்மைகள் நன்கு கிரகிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்வதற்குரியன என்பதைத் தெளிவாக்கும் முறையில் ஏனைய தரிசனங்கள் தரும் கருத்துக்களையும் கொண்ட முடிபுகளையும் முறையாகவும், தெளிவாகவும் விளக்கி அவற்றைச் சித்தாந்த நோக்கில் தருக்க அடிப்படையில் படிப்படியாக மறுத்துப் பரமத கண்டஞ் செய்து, சைவசித்தாந்தக் கோட்பாட்டினை நிறுவும் பொழுதெல்லாம், சைவசித்தாந்தம், ஏனைய தரிசனங்களின் சிந்தனை முறைகளைத் தெளிவாக எடுத்துப் பேசும் சந்தர்ப்பங்கள் தவிர்க்க முடியாதவை. ஆகையால், சைவசித்தாந்தம் இந்து தத்துவ

சிந்தனைகளின் விளக்க விரிவுரைகளை உள்ளடக்கிய பெருந்தத்துவமாகத் திகழ்ந்துவருகின்றது. இந்நிலையில் சைவசித்தாந்தம் முறையே கற்பவர், தாமாகவே எல்லா இந்து தத்துவமுறைகளைக் கற்பவராகிவிடுவர்.

மேலும், சைவத் திருக்கோயில்களை நிலைக்களனாகக் கொண்டு அங்கு வளர்ந்து வரும் கலைகளின் தொகுதியில், எல்லாக் கலையமிசங்களின் நுணுக்கங்களையும் அவற்றின் பல்வகைச் சிறப்புக்களையும், ஒருங்கு காணமுடிகின்றது. சுருங்கக்கூறின், சைவ வழிபாட்டு நிலையங்கள், கலைகள் யாவற்றையும் உள்ளடக்கிய கலைக்கூடமாகக் திகழ்கின்றன.

எந்தத் தெய்வத்தை வழிபடுவோர்க்கும் அருள் சுரப்பவர் மாதொருபாகரே என்ற பரந்த நோக்குடைய சைவ தத்துவம், சைவத்துள் ஏனைய தத்துவங்கள் ஒன்றிணையப் பெரும் அநுசரணையாக இருந்து வருகின்றது எனலாம்.

பாரதம் முழுவதும் பயிலும் இந்து மதத்தின் அமைப்பினைச் சமயரீதியாகவும், தத்துவரீதியாகவும், கலையமிசம் மிகுந்த பண்பாட்டு ரீதியாகவும், நோக்குமிடத்து **அது** எல்லா மதங்களையும் தன்னுட் பிரிவுகளாக உள்ளடக்கியும், எல்லாத் தத்துவ சிந்தனைகள் பற்றிய சர்ச்சை நிகழ்ந்த பேரரங்காக விளங்கியும், எல்லாக் கலையமிசங்களையும் பண்பாட்டமிசங்களையும் பேணியும், பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கும் **தென்னாட்டுச் சைவத்தின் மறு வடிவமாகத் தெரிகின்றது.** அதிலிருந்து **இந்து** என்றால் **சைவம்** என்பதும், **சைவம்** என்றால் **இந்து** என்பதும், தெளிவாகப் புலனாகின்றது. சைவம் என்ற பெயரைக் காட்டிலும் இந்து என்ற பெயரே சர்வதேச ரீதியில் வழங்குவதால், சைவத்தை இந்து என்று வழங்குவது தவிர்க்க முடியாதவாறு உலகப் பிரசித்தி பெற்று விடுகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. **Encyclopaedia of Religion and Ethics,** Vol.VI. p. 686ff.

2. கைச்சுட்டுவிரல் முதல் சிறு விரல் வரை உள்ள நான்கு விரல் களையும் ஒன்றோடொன்று ஒட்டியமைத்து, கைத்தலத்திற்குச் சம மட்டத்தில் செங்குத்தாக மேல்நோக்கி நிறுத்திப் பெருவிரலைச் சுட்டுவிரலோடு சேர்த்து மேல்நோக்கி அமைத்துப் பிடிக்கும்கை அமைதிக்கு அபயஹஸ்தம் என்றுபெயர். நாட்டியவழக்கில் இது பதாகம் எனப்படும். பயமில்லை என்பதை இக்கையமைதி காட்டி நிற்கும்.

3. அபயஹஸ்தத்தைத் தலைகீழாகப் பிடிப்பின் அது வரதஹஸ்த மாகும். இது வரம் கொடுக்கும் கையெனப் பொருள் தரும்.

4. **Indian Philosophy II**, p. 724 ஒப்பிடுக. **சிவப்பிரகாசம்** பாடல் 13.

5. **தெய்வத்தின் குரல் I,** ப.125.

6. "The indigenous names by which Hinduism is known are Sanatana – dharma and Vaidika – dharma" **Outlines of Hinduism,** p.12.

7. **Outlines of Hinduism,** p.12.

8. "பல்வேறு மதங்கள் இருக்கிறபோது தான் ஒன்றிலிருந்து இன் னொன்றுக்கு வித்தியாசம் தெரிவதற்காகப் பெயர் கொடுக்க வேண்டும். ஒரே மதம் தான் இருந்ததென்றால் பெயர் எதற்கு?" **தெய்வத்தின் குரல் I**, ப.127.

9. **தொல்காப்பியம்**, பொருளதிகாரம், அகத்திணையியல், சூத்திரம் 5.

10. இவ்வழிபாட்டு நெறிகள் பற்றி முதன்முதல் விரிவாக வெளிவந்த நூல் பண்டார்க்கர் என்பவரியற்றியது. Vide: **Collected works of Sir R.G. Bhandarkar**, Vol.IV. pp.1- 224.

11. "At the outset it should be noted that the Hindus are agreed in their allegiance to the Vedas" **Outlines of Hinduism,** p.22.

12.“Hinduism, which is the oldest of the world religions had its origin in India” “The indigenous names by which Hinduism is known ear sanatana dharma and Vaidikadharma. Sanatana dhahrma means etenal religion” **Outlines of Hinduism,** p.12.

“They accepted it as some thing which had always been, what it was, and will be for ever more. They regarded their religion as an integral part of a complete way of life and interwoven with it. This way of life, they called.the **Sanatana Dharma** – the estab lished, permanent . and eternal way of life” **Hinduism,** p.28.

13. இவை பற்றிய விரிவான கருத்துக்களை பற்றிப்பார்க்க. **Outlines of Hinduism,** pp.28.-39.

14. “ The richness, beauty and greatness of Hinduism lie, no doubt , in its spirit of accommodation” **Outlines of Hinduism,** p.21. also
“ Hinduism realises the truth and allows the widest freedom in matters of faith and worship” ibid. p.16.

15. ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி. **இருக்குவேதம்** I. 164.46
மேலும் பார்க்க ; **இருக்கு வேதம்** X.121.
**இருக்கு வேதம்** X.90.

16. தர்ம சாஸ்திரம் முழுவதையும் அலைசி ஆராய்ந்து, பல்வேறு தலைப்புக்களின் கீழ் பல புத்தகங்களாக, தர்மசாஸ்திர வரலாறு என்னும் நூல் ஆங்கிலத்தில் P.V.Kane என்பவர் வெளியிட்டு ள்ளார். இது தனியொருவரின் அரும் பெரும் முயற்சி.

17. **Arthasastra.**

18. சூத்திரங்களாக அமைவதனால் காமசூத்திரம் எனப்படும் நூல் இல்லற இன்ப நுணுக்கங்களை முறையாயமையும் சாஸ்திர வடிவில் ஆராய்வது. பார்க்க: **Kamasutra of Vatsyayana.**

19. **சிவஞான சித்தியார்** சுபக்கம் பாடல் 115.

20. **பகவத்கீதை** IX. 23. " ஏனைய தெய்வங்களிடம் பத்திசெலுத்து பவர்கள் அத்தெய்வங்களைச் சிரத்தையுடன் வழிபடும் பொழுது விதிப்படி வழிபடாவிடினும், என்னையே வழிபடுகிறார்கள்."

21. அபௌருஷேயம் பற்றிய மேலதிக விவரங்களைக் காண்க. **தெய்வத்தின் குரல் I,** ப. 214. மேலும், பார்க்க:
**Outlines of Hinduism,** p.29.
"The Vedas are eternal (nitya) and impersonal (apauruseya)"

22. **A Constructive Survey of the Upanisadic Philosophy,** pp. 178 - 233.

23. **தெய்வத்தின் குரல் II,** பக். 396 – 398.

24. பரோக்ஷ: ப்ரியா இவ ஹி தேவா: என்பது சுருதி.
**The Religion and philosophy of the Vedas and Upanisads.**
HOS. Vol. 32. p. 482ff .

25. **Outlines of Hinduism,** p.39 last 3 lines.

26. **திருமந்திரம்** (எட்டாம் தந்திரம்) பாடல் 2397.
"வேதமோடாகமமெய்யா இறைவனூ
லோதுஞ் சிறப்பும் பொதுவு மென்றுள்ளன."
மேலும், பார்க்க **சிவஞான சித்தியார்** பாடல் 267.

27. **திருவாசகம்**, சிவபுராணம் வரி 4.

28. **சைவத் திருக்கோயிற் கிரியை நெறி**, ப. 117.

29. **காரணாகமம் I.** 74வது படலம்முதல் 101வது படலம் வரை **காரணாகமம் II.** 53வது படலம் முதல் 99 வது படலம் வரை இவை, திருவுருவங்களின் அமைப்பு, பின்னணி ஆகிய விவரங்க ளையும் அவற்றைப் பிரதிட்டிக்கும் முறையையும் கூறுவன.

30. **சைவத்திருக்கோயிற் கிரியை நெறி**, பக். 204 – 248.

31. மேற்குறித்த நூல், பக். 193 – 203.

32. "ஸ்வாமின் சர்வ ஜகந்நாத யாவதாசந்த்ர தாரகம்
தாவத்த்வம் பிரீதி பாவேன பிம்பே ஸ்மின் சந்நிதிம் குரு "
என்று கும்பாபிஷேகத்தினிறுதியில் விடும் வேண்டுகோள் குறிப்பிடத்தக்கது.

33. **சுப்ரபேதாகமம்.** இவ்வமைப்பைப் பெற்றிருப்பதை ஒரு எடுத்துக் காட்டாகச் சுட்டலாம்.

34. **இதி** இவ்வாறு **ஹ** (வற்புறுத்தும் ஓர் அசை) **ஆஸ** இருந்தது என்றபொருள் தரும். இதிஹாஸ என்னும் சொல் (உண்மையாக) நிகழ்ந்ததொன்றைக் கூறும் சரித்திரம், வரலாறு, எனப் பொருள் தருவது நோக்கற்பாலது. "இதிஹாஸ: புராவ்ருத்தம்" இதிசாசம் முன்நிகழ்ந்தது என்றநிகண்டு வாக்கியம் இதை வலியுறுத்தும். **அமரகோசம்** சுலோகம் 161.

35. சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மந்வந்தரம்,வம்சாநுசரிதம் என்பன புராணங்களின் ஐந்து உறுப்புக்கள்.
இவை பற்றி மேலதிகமான விவரங்களைக் காண்க: **ஈழத்துச் சிதம்பர புராணம்**, அணிந்துரை, பக். vii முதல் ix வரை.

36. அக்நிபுராணம், பாகவதபுராணம், பவிஷ்யபுராணம், பிரமபுராணம், பிரமாண்டபுராணம், பிரமவைவர்த்த புராணம், (தேவிபாகவத புராணம்), கருடபுராணம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், மார்க் கண்டேயபுராணம், மத்ஸ்யபுராணம், பத்மபுராணம், சிவபுராணம், கந்தபுராணம், வாமனபுராணம், வராஹபுராணம், வாயுபுராணம், விஷ்ணுபுராணம் என்பன பதினெண் புராணங்கள்.
இதே எண்ணிக்கையினதான உபபுராணங்களும் உள. இப்புரா ணங்களினமைப்பைப் பின்பற்றி காவியப் பண்புகளுடன் உருவா னவற்றுள் தலைசிறந்தவை, பெரியபுராணம், கந்தபுராணம் திரு விளையாடற்புராணம், என்னும் தமிழ்ப்புராணங்கள் தமிழிலக்கி யத்தில் புராணங்கள் அமைந்தவாறு வேறு எந்த இந்திய மொழி யிலும் புராண இலக்கியங்கள் விரிவடையவில்லை.

37. **ஈழத்துச் சிதம்பர புராணம்**, அணிந்துரை, பக். VII - IX.

38. **சைவத்திருக்கோவிற் கிரியை நெறி**, பக். 47 – 64.

39. **Outlines of Indian Religious Literature.**

40. பிராமணங்களில், விரித்துரைக்கப்பட்ட வைதிகக் கிரியை விவரங்கள், பூர்வ மீமாம்சையில் சீராயமையப்பெற்று, சிரௌத சூத்திரங்களிலும் கிருஹ்ய சூத்திரங்களிலும் தேவைக்கேற்ப மேலும் விரிக்கப்பட்டு ஆகமநூல்களில் விதிக்கப்பட்ட கோயிற் கிரியைகள் பத்ததிகளாக விரிந்தமைந்ததைக் கருத்திலிருத்தி நோக்கின் கிரியை நூல்கள் விரிந்தவாற்றை நன்கு உணரலாம்.

41. **வடமொழி இலக்கிய வரலாறு**, பக். 141 – 153.

42. மேற்குறித்த நூல், பக். 133 – 137.

43. "ப்ரவ்ருத்திர் வா நிவிருத்திர்வா நித்யேந க்ருதகேனவா பும்ஸாம் யேந உபதிச்யந்தே தத் சாஸ்திரம் அபிதீயதே" என்ற வரைவிலக்கணம், சாஸ்திரங்கள் விதித்தும் விலக்கியும் முறைகளை எடுத்துரைக்கும் இயல்பினைச் சுட்டும்.

44. **சைவத் திருக்கோயிற் கிரியைநெறி**, ப. 158.

45. **Kamasutra of Vatsyayana.**

46. மேற்குறிப்பிட்ட நூல், பக். 74 – 77.

47. சதுஷ் ஷஷ்டி கலாமயீ. **லலிதா சஹஸ்ரநாமம்**, ப. 72.

48. **அகோர சிவாசாரியார் பத்ததி**, பக். 9. –10.

49. **பகவத்கீதை** , IX - 27. , **சௌந்தர்யலஹரி** , பாடல் 27.

50. **திருநாவுக்கரசு நாயனார் தேவாரத் திருப்பதிகங்கள், நாலாந்திருமுறை**, பக். 77 – 93.
ஒப்பிடுக : **திருவாசகம், திருச்சதகம்** 26வது பாடல்.

51. **சிவானந்த லஹரி**, 7 வது சுலோகம் ப. 31 முதல்

52. **மகுடாகமம்**, சிவார்ச்சநா விதிப்படலம், சிவபூஜாபிரசஸ்தி ப. 11. சுலோகங்கள் 2 – 3

53. மேற்குறித்த நூல், ப. 11. சுலோகங்கள் 4 – 10. **காரணாகமம் I**, ப. 207, சுலோகம். 2

54. அர்ச்சகஸ்ய பிரபாவேண சிலா பவதி சங்கர : (அர்ச்சகருடைய பிரபாவத்தினால் சிலை சங்கரனாக மாறுகின்ற.)

55. **மந்த்தர தந்த்ர க்ரியா முத்ரா பாவநா பாவ கர்பித**: (மந்திரம், தந்திரம், கிரியை, முத்திரை, பாவனை ஆகியவற்றை உள்ளீடாகக் கொண்டவன்) என ஆசார்ய லட்சணம் காரணாகமத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது. பார்க்க : **சிவாகமசேகரம் பிரதிஷ்டாவிதி** I ப.21. மேலும் ஒப்பிடுக: சிஞானசித்தியார்., சுபக்கம், பாடல் 298ம் அதன் உரையும்.

56. **காரணாகமம்** I பக். 197 – 201
**சுப்ரபேதாகமம்**, பக். 46 – 48
**மிருகேந்த்ராகமம்**, (விளக்கப் படங்களுடன்) பக். 45 – 52

57. **சிவலிங்க பிரதிஷ்டாவிதி** I பக். 96 – 97
**ஸ்ரீவித்தியா சபர்யா பத்ததி**, பக். 41 – 44.

58. **Elements of Hindu Iconography, vols. I – IV**
**The Development of Hindu Iconography.**

59. **Hindu Architecture.**

60. **சைவத் திருக்கோவிற் கிரியை நெறி**, பக் 90 – 91.

61. முற்குறித்த நூல், பக். 88 – 99 ; 161 – 162.

62. **Sangitaratnakaram , Indian Music.**

63. **The Story of Indian Music and Instruments.**

64. **Natyasastra.**

65. **சைவத் திருக்கோவிற் கிரியை நெறி**, ப. 203.

66. மேற்குறித்த நூல், பக். 67 – 68.

67. மேற்குறித்த நூல், ப. 163.

68. பூமன் சிரம் கண்டி அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மா வழுவூர்,
காமன் குறுக்கை, யமன் கடவூர், இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடித் தன் சேவகமே.

**சிவஸ்தல மஞ்சரி**, ப. 182

69. அஞ்ஞான திமிராந்தஸ்ய ஞானஞ்சந சலாகயா I
சக்ஷுருன் மீலதம் ஏயம் தஸ்மை ஸ்ரீ குரவே நம : II

70. குருர் பிரம்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மாஹேச்வர: I
குருஸ் ஸாக்ஷாத் பரம் பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: .II

**ஸ்ரீவித்யா சபர்யா பத்ததி**, ப. 2.

71. **தைத்திரீய உபநிடதம்**, சிக்ஷாவல்லி, இறுதிப்பந்தி.

72. **தெய்வத்தின் குரல் II,** ப. 51.

73. **திருவருட்பயன்**, அதிகாரம் 5, பாடல்கள் 41 – 50.

74. **சிவாகம சேகரம் I,** ப.20; **சைவத்திருக்கோயிற் கிரியைநெறி** ப.207.

75. தட்சணாமூர்த்தி, முருகன், கண்ணன் ஆகிய தெய்வங்கள் குரு வடிவில் பெற்ற திருக்கோலங்கள் வழிப்படப்படுவது நோக்கற்பாலது.லலிதாசஹஸ்ரநாமத்தில் வரும் 'குருமூர்த்தி ' என்றநாமம் அம்பிகையையும் குருவடிவில் காட்டிநிற்கின்றது.

76. Compare: "He turns in wards (avrtta – caksus ) and beholds within himself the resplendent spirit of God, who is the seat of supreme felicity and Bliss" **Outlines of Hinduism,**

77. **Indian Philosophy II, Outlines of Indian Philosophy, An Introduction to Indian Philosophy.**

78. " The very fact that it has survived to this day inspite of the vicissi tudes of history, and does not show any great sign of decay, proves that there is a soul to it which holds together its different limbs in an indissoludle unity." **Outlines of Hinduism, p.21.**

79. " Hinduism has no founder; the ancientseers served as but channels for the transmission of religious truths to humanity". **Outlines of Hinduism, p.11**

80. சிவஞான சித்தியார், பரபக்கம் முழுவதும் இதுபற்றியே பேசுவது குறிப்பிடத்தக்கது.

## நூற்பட்டியல்


**சம்ஸ்கிருத நூல்கள் :**

அகோர சிவாசார்ய பத்ததி, சிதம்பரம், 1927

இருக்கு வேதம், தாமோரபட்டர், ஸ்ரீ பாதசர்மா (பதி.) 1957.

காரணாகமம், ஷண்முகசுந்தரமுதலியார், கோ. (பதி.) சிவஞானபோத யந்திரசாலை, சென்னை.

சிவலிங்கப் பிரதிஷ்டா விதி, இரண்டாம் பாகம், பருத்தித்துறை, 1953.

சிவஸ்தல மஞ்சரி, சுப்பிரமணிய பிள்ளை, திருப்பதி, 1931

சிவாகம சேகரம் பிரதிஷ்டா விதி, பருத்தித்துறை, 1949.

சிவானந்தலஹரி, கிரி பிரஸ். சென்னை.

சுப்பிரபேதாகமம், அழகப்ப முதலியார் (பதி.) சிவஞானபோத யந்திரசாலை, சென்னை

சௌந்தர்யலஹரி, அண்ணா (பதி.) ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1974.

தைத்திரீய உபநிஷத், சுவாமி சர்வானந்தா (பதி.) ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை. 1973.

மகுடாகமம், தென்னிந்திய அர்ச்சகர் சங்கம் சென்னை, 1977

மிருகேந்திராகமம், பாண்டிச்சேரி, 1962.

லலிதா சகஸ்ரநாமம், நிர்ணய சாகரப் பதிப்பு, பம்பாய், 1919.

ஸ்ரீ வித்தியா சபர்யா பத்ததி, சுப்பிரமணிய ஐயர், சென்னை, 1938.

ஸ்ரீமத் பகவத்கீதை, சுவாமி சித்பவானந்தர் உரை, தபோவனப் பிரசுராலயம், திருச்சி 1966.

**Artha Sastra,** ed.with Trans. Shyamasastri, Mysore, 1961.

**Kamasutra of Vatsyayana,** Theraporawela & sons, Bombay.

**Natyasastra ,** Gaekward Oriental series, Vol Cxxxiv, Baroda.

**Sangitaratnakaram,** Adyar publication , Madras.


## தமிழ் நூல்கள் (மூலம்)


சிவஞான சித்தியார், யாழ்ப்பாணம் கூட்டுறவு தமிழ் நூற் பதிப்பு விற்பனைக்கழகம், யாழ்ப்பாணம். 1971.

சிவப்பிரகாசம், (திருவிளங்கம் - (மு.உரை) யாழ்ப்பாணம். கூட்டுறவு தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம், யாழ்ப்பாணம்.

திருநாவுக்கரசு நாயனார் நாலாந்திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு தருமபுரம்.

திருமந்திரம், உலகநாதமுதலியார். வி. (பதி.) விவேக போதினி காரியாலயம். சென்னை, 1924.

திருவருட்பயன், சிவபாதசுந்தரம். சு. (உரை) சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம், 1955.

திருவாசகம், சுவாமி சித்பவானந்த உரை, ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருச்சி, 1975.

## தமிழ் நூல்கள் - பொது

**ஈழத்துச் சிதம்பர புராணம்,** இளமுருகனார், புலவர்மணி, சோ., ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம், காரைநகர். 1972.

**சைவத் திருக்கோவிற் கிரியை நெறி,** கைலாசநாதக்குருக்கள், கா., இந்து கலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு. 1963.

**தெய்வத்தின் குரல், முதற்பகுதி,** ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச் சாரிய சந்திரசேகரேந்திர சுவாமிகள், வானதி பதிப்பகம், சென்னை. 1976.

**தெய்வத்தின் குரல், இரண்டாம் பகுதி,** ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய் சந்திரசேகரேந்திர சுவாமிகள், வானதி பதிப்பகம், சென்னை. 1978.

**வடமொழி இலக்கிய வரலாறு,** கைலாசநாதக் குருக்கள், கா., கலாநிலையம், கொழும்பு. 1962.

## ஆங்கில நூல்கள் - பொது

**A History of Indian Literature,** Winternitz, M., University of Calcutta, 1963.

**An Introduction to Indian Philosophy,** Datta and Chattreji, Calcutta, 1950.

**An Outline of the Religious Literature of India ,** Farquhar, J.N., Oxford University Press . London, 1920.

**Collected Works of R.G.Bhandarkar,** Bhandarkar Oriental Research Institute, Poona, 1929.

**Constructive Survey of the Upanisadic Philosophy,** Ranade, R.D., Poona. 1926.

**Elements of Hindu Iconography,** Gopinath Rao, T.A., Indological Book House, Delhi.

**Encyclopaedia of Religion and Ethics.**

**Hindusim,** Chaudhuri. N.C., New Delhi. 1970.

**Hindusim Architecture,** Brown Perey, Bombay.

**Indian Music,** Gauri Kuppuswamy and Hari Haren, M., Delhi, 1980.

**Indian philosophy,** Vol. I & II. Radhakrishnan, S., London, 1948

**Outlines of Hinduism,** Mahadevan, T.M.P., Chetana Limited, Bombay, 1960.

**Outlines of Indian Philosophy** Hariyanna, M., London, 1964.

**Religion and philosophy of Vedas and Upanishads,** Keith, A.B., Vol. 32, Harvard Oriental Series.

**The Development of Hindu Iconography,** Banerjea. J.N., Munshi Ram Manohar Lal Pub. Lt., Delhi, 1974.

**The Story of Indian Music and Instruments,** Ethal Rosenthal, Delhi, 1970.

பாட்டிற்கான பணிகளை இனங்கண்டு செயலாற்றுதல்; சைவம், தமிழ் என்பனவற்றின் வளர்ச்சிக்குப் பணிபுரிதல்; நியந்த்ரீயோடு இணைந்து சம்ஸ்கிருத கல்லூரி ஆரம்பித்தல் என்னும் நோக்கங்களைக் கொண்டு யாழ்.பல்கலைக்கழக மக்கள்வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கினை (இல: 11040) ஆரம்பித்துச் செயற்பட்டு வருகின்றது.

இரண்டாண்டுகள் சேவையாற்றிவரும் இச்சபை **1.கைலாசநாதம், 2.ஸ்ரீசண்டயஞ்ஞபத்ததி, 3.என்சரிதம், 4.கைலாசநாதாஞ்சலி, 5. யாழ்ப் பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வியை வளர்த்த நிறுவனங்களும் அறிஞர்களும், 6. கீர்த்தனாதசகங்கள், 7. தகனசம்ஸ்காரம், 8.கிரியாக் கிரமபத்ததி - 1, 9. இந்துப்பண்பாடு சில சிந்தனைகள்** என அன்னாரது நினைவாக நூல் களை வெளியிட்டு வந்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் நல்லூர் சிவன் கோவிலில் 11-03-2001 அன்று இச்சபையின் கீழ் **வாழ்நாட் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள் ஆய்வு நிறுவனம்** சம்பிரதாய பூர்வமாக ஆரம் பித்து வைக்கப்பட்டது. அது முதலாக அன்னாரது நினைவாக நூல்நிலையம் ஆரம்பித்து நூல்களை சேகரித்துவருகின்றது.

எமது குருநாதரின் முதலாமாண்டு நினைவுதினம் 29-07-2001 அன்று நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற்றது. அன்று **சிவாகம மரபுகளும் சமகாலச் செல்நெறிகளும்** எனும் பொருளில் தலைவர் **பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்** அவர்களால் முதலா மாண்டு நினைவுப்பேருரை நிகழ்த்தப்பட்டது. இவ்வருடம் 18-08-2002 அன்று **இலங்கையில் இந்துக்கள் - குடிப்புள்ளியியல் பார்வை** எனும் பொருளில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் **பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை** அவர்களால் இரண்டாமாண்டு நினைவுப் பேருரை நல்லூர் சிவன் கோவிலில் நிகழ்கிறது.

எமது குருநாதரின் சிந்தனைகளை செயல்வடிவமாக்குதல், அவரது ஆக்கங்களை வெளியிடுதல் ஆகிய பெரும் பணிகளில் தன்னை இணைத்து இச்சபை செயலாற்றி வருகின்றது.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam



# வாழ்நாட் பேராசிரியர், இலக்கிய கலாநிதி
# கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள்

யாழ்ப்பாணத்து நல்லூரில் காசியப கோத்திரத்தில் 21-08-1921ல் பிறந்து எழுபத்தொன்பது வருடங்கள் வாழ்ந்த பேராசிரியர் அமரர் கா.கைலாசநாதக்குருக்கள், சோதிட நிபுணரும், வேதாகம விற்பன்னரும், நல்லூர் சிவன்கோவிலை நிறுவியவரும், சேர்.பொன்.இராமநாத வள்ளலின் சமயகுருவாகத் திகழ்ந்தவருமாகிய நல்லூர் பிரம்மஸ்ரீ ந.வே.கார்த்தி கேயக்குருக்கள் சுந்தரம்மா தம்பதிகளின் சீமந்த புதல்வராவார்.

வட்டுக்கோட்டை வரகவி சிவஸ்ரீ நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியாரால் அக்ஷராரம்பம் செய்விக்கப் பெற்ற பேராசிரியர் குருக்கள் தமது பாடசாலைக் கல்வியை நல்லூர் மங்கயற்கரசி வித்தியாசாலை, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட வைக்கம் பிரம்மஸ்ரீ சிதம்பரசாஸ்திரிகளிடமும், தனது தந்தையாரிடமும், வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகளிடமும் வேதாகம உயர்தர சம்ஸ்கிருதக் கல்வியைக் கற்றதோடு பல்கலைக்கழக அனுமதி பெற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் Betty Heimann அவர்களிடம் சம்ஸ்கிருத மொழியைக் கற்று B.A.(Hons.), M.A ஆகிய பட்டங்களையும்; இந்தியா, பூனே பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் R.N.தண்டேகார் தலைமையில் இதிகாச புராணங்களில் காணப்படும் சைவம் பற்றியும்; தென்பாரதத்திலும் இலங்கையிலும் நிகழும் சைவக்கிரியைகள் பற்றியும் நிகழ்த்திய ஆய்வின் விளைவாக Ph.D. பட்டம் பெற்றார். சம்ஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ், இலத்தீன், பாளி ஆகிய மொழிகளில் ஆழமாகவும் பிரெஞ்சு, ஜேர்மனியம் ஆகிய மொழிகளில் ஆராய்ச்சிக்கு வெண்டிய அளவிலும் புலமைத்துவம் பெற்றார்.

கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் சம்ஸ்கிருதத்துறையில் விரிவுரையாளராகவும், துறைப் பொறுப்பாளராகவும் விளங்கினார். யாழ்.பல் கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறை முதற்பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் விளங்கினார்.

ஸ்ரீவித்யா குருகுலம், ஸ்ரீமுத்து விநாயகர் வேதாகம ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் இயக்குனராகவும்; சேர்.பொன்.இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம், நியந்த்ரீ, வேதாகம சபா ஆகியனவற்றின் காப்பாளராகவும் விளங்கினார்.

**சம்ஸ்கிருத இலகுபோதம் I, II வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக்கோவிற் கிரியைநெறி, கிரந்தாக்ஷரலகுபோதம், இந்துப்பண்பாடு சில சிந்தனைகள், என் சரிதம்** ஆகியனவற்றின் ஆசிரியராகவும் **ஸ்ரீசண்டீயஞ்ஞ பத்ததி, ஸ்ரீசக்கரபூஜை** ஆகியனவற்றின் தொகுப்பாசிரியருமான பேரா சிரியர் குருக்கள்; சிவாகம ஞானபானு, வேதாகம மாமணி என்னும் பட்டங்களைப் பெற்றார். யாழ்.பல்கலைக்கழகத்தால் இவருக்கு வாழ்நாட்பேராசிரியர் இலக்கிய கலாநிதி என்னும் கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

சைத்திருக்கோவிற் கிரியைகளைச் சிறப்புறச் செய்துவைக்கும் சிறப்புடைய பேராசிரியர் குருக்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்ததோடு இருமுறைகளாக உலக சுற்றுப்பயணங்களைச் செய்து இந்துப்பண்பாட்டினை உலகறியச் செய்தார். அவரின் உயரிய கனவு இந்துக்கலைக்கூடம் உருவாக வேண்டும் என்பதேயாம்.

அப்பெரியார் 07.08.2000ல் மறைவுற அவரது அன்புக்குரிய மாணவர்கள் அவரது சிந்தனைகளைச் செயல்வடிவம் ஆக்குவதற்குப் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்தசபை / ஆராய்ச்சிநிறுவனம் / நூல்நிலையம் ஆகியவற்றினை அன்னாரது நல்லூர்சிவன் கோவிலை அடித்தளமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

**பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**